தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**14.11.2013**

**கோமாரி நோயும் அதனை தடுக்கும் முறைகளும்**

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கோமாரி நோய் தாக்குதலால் கால்நடைகள் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதனால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நோய் வருவதற்கு முன்பு கால்நடைகளை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவற்றை பராமரிப்பது அவசியம் அகும். கால்நடைகளை பாதிக்கும் கோமாரி நோயை தடுக்கும் முறைகளை குறித்து கூறுகிறார் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் எஸ்.ராஜேந்திரன்.

கோமாரி நோய் கால்நடைகளின் கால் மற்றும் வாய் நோய் எனப் பொதுவாக அழைக்கப்படுகிறது. கால்கானை வாய்க்கானை என்றும் கால் சப்பை என்றும் இந்நோயிக்கு வேறு பெயர்களும் உண்டு. ஒருவகை நச்சுயிரியால் இந்த நோய் உண்டாகுகிறது. இரட்டை குழம்புகளைக் கொண்ட பசு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி போன்ற கால்நடைகள் இந்த நோயால் பாதிக்கப்படும். குறிப்பாக எச்.எப். மற்றும் ஜெர்சி போன்ற கலப்பின மாடுகள் அதிக அளவில் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றன.

நோயால் பாதிக்கப்பட்ட கறவை மாடுகளிலிருந்து பால் சுரப்பது குறைவது மட்டுமல்லாமல் சினை பிடிப்பதும் பாதிக்கப்படும். இளங்கன்றுகள் உயிரிழக்க நேரிடும். இத்தகைய சம்பவங்களால் கிராமப் பொருளாதாரம் பாதிக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. குளிர் மற்றும் பனிக்காலங்களில் இந்த நோய் விரைவில் பரவக் கூடியது. இந்த நோயானது 7 வகைகளான கிருமிகளால் உண்டாகின்றன. அவற்றுள் ஓ, ஏ, சி, ஆசியா ஆகிய 4 கிருமிகள் இந்தியாவில் இந்த நோயை ஏற்படுத்துகின்றன.

**நோய் பரவும் விதம்:**

நோய் பாதித்த மாடுகளிலிருந்து மற்ற மாடுகளுக்கு நேரடியாக காற்றின் மூலம் பரவுகிறது. மேலும், நோய் பாதிக்கப்பட்ட மாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட தீவனம், தீவனத்தொட்டி, தண்ணீர் மற்றும் மாட்டின் உமிழ்நீர், பால், சாணம் ஆகியவற்றின் மூலம் பரவுகிறது. சில நேரங்களில் கால்நடைகளை பராமரிக்கும் மனிதர்கள் மூலமும் இந்த நோய் பரவுகிறது. காற்று வீசும் திசையில் காற்றுத்துகள்கள் மூலம் சுமார் 300 கி.மீ வரையிலும் இந்த நோய் பரவும் தன்மை கொண்டது.

**நோயின் அறிகுறிகள்:**

காய்ச்சல், தீவனம் உள்கொள்ளாமல் இருப்பது, வாயிலிருந்து நுரை கலந்த உமிழ்நீர் ஒழுகுதல், வாயின் உட்பகுதி, நாக்கு, கால் குளம்புகளின் நடுப்பகுதியி, மடி மற்றும் மூக்கின் உட்பகுதிகளில் கொப்பளங்கள் தோன்றி, பின்னர் அவை புண்ணாக மாறும். மாடுகள் நொண்டும். நோய் கண்ட மாட்டின் பாலை அருந்தும் கன்றுகள் உயிரிழக்கும். அசைபோடும்போது சப்பு கொட்டுவது போல சப்தம் உண்டாகுதல், உரிய காலத்தில் சிகிச்சை எடுக்காத கால்நடைகள் உயிரிழப்பது போன்றவைகள் இந்த நோயிக்கான அறிகுறிகள் ஆகும்.

**நோய் தடுப்பும், பாதுகாப்பும்:**

கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான அறிகுறிகள் தெரிந்தவுடன் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை மருத்துவனை அணுகி உரிய சிகிச்சை பெறவேண்டும். நோயுற்ற மாடுகளை ஒதுக்குப்புறமாக வைத்து சிகிச்சை அளிக்க வேண்டும். பாதிக்காத மாடுகளோடு தொடர்பு இருக்கக் கூடாது. நோய் பரவும் காலங்களில் கால்நடைகளை வாங்குவதோ, விற்பனை செய்வதுக் கூடாது.

வாயில் புண்கள் இருந்தால் தீவனம் உட்கொள்ள முடியாது. ஆகையால் காய்ச்சிய கஞ்சி மற்றும் அகத்தி போன்ற பசுந் தீவனங்களை அளிக்க வேண்டும். வாயில் ஏற்பட்ட புண்களுக்கு போரோகிளிசரின் கலவையை பூ வேண்டும். காலில்

ஏற்பட்டுள்ள புண்ணுக்கு போரிக் பவுடர் மற்றும் வேப்பெண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு சிகிச்சை அளிக்கலாம்.

**தடுப்பு முறைகள்:**

நோய் அறிகுறிகள் தெரிந்தவுடன் அருகில் உள்ள கால்நடை மருத்துவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். நோயற்ற கால்நடைகளை தனியாக பிரித்து வேறு இடத்தில் வைத்து தீவனம் மற்றும் தண்ணீரை தனியாக அளிக்க வேண்டும். நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை பராமரிப்பவர், கால்நடைகளை கையாளும் முன்பும், பின்பும் கைகளை சோப்புப் போட்டு சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. சுண்ணாம்புத் துகள்களை மாட்டுத் தொழுவத்தை சுற்றியும் தூவ வேண்டும். நோயுள்ள பகுதிகளில் புதிய கால்நடைகளை வளர்க்கக் கூடாது. ஆண்டுக்கு இரு முறை தடுப்பூசி போடலாம்.

இத்தகைய முறையில் கால்நடைகளை பராமரிப்பதால் பால் உற்பத்தியை பெருக்கி கிராம பொருளாதாரத்தை மேம்படுத்தலாம். மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையோ அல்லது கிருஷ்ணகிரி மாவட்ட மண்டல இணை இயக்குநரை நேரிலோ அல்லது தபால் மூலம் அணுகலாம்.

**பலன் தரும் பப்பாளி சாகுபடி!**



பழ மரங்களில் காத்திருந்துதான் கனியைப் பறிக்க முடியும். இதற்கு விதிவிலக்காக இருப்பது பப்பாளி. ஓராண்டுக்குள்ளேயே பலன் தரும் பழமரமாக பப்பாளி உள்ளது.

சத்துகள்: காரிகா பாப்பையா என்ற தாவரவியல் பெயர் கொண்ட பப்பாளியில் புரதம், நார்ப்பொருள், மாவுப் பொருள், கால்சியம், பாஸ்பரஸ், சோடியம், பொட்டாசியம் உள்ளிட்ட தாது உப்புகளும், தையாமின், ரிபோபுளோவின், நியாஸின், வைட்டமின் ஏ, வைட்டமின் சி ஆகியவையும் உள்ளன. வைட்டமின் ஏ அதிகளவில் உள்ளது. காய்களில் இருந்து எடுக்கப்படும் பப்பைனில் புதிய புரத வகைகளை உருவாக்கவல்ல புரோட்டினஸ் என்ற என்சைம் உள்ளது.

ரகங்கள்: கோ 1 முதல் 7 வரை, ரெட் லேடி ஆகியவை சிறந்த ரகங்கள். கோ 3, 7 ரகங்கள் இருபால் மலர்களையும், பெண் மலர்களையும் கொண்டதாக இருக்கும். பழமாக வெட்டிச் சாப்பிட ஏற்றது. கோ 2, 5, 6 ஆகிய ரகங்கள் பழங்களாக சாப்பிடவும், பப்பைன் உற்பத்திக்கும் ஏற்றதாகும்.

காலநிலை: 35 முதல் 35 சென்டிகிரேட் வரையுள்ள வெப்ப நிலையில் நன்கு வளரும். வடிகால் வசதியுள்ள மண் ஏற்றது. நடவுக்கு ஒரு ஹெக்டேருக்கு 500 கிராம் விதைகள் தேவை.

நாற்றங்கால்: பாலிதீன் பையில் பைக்கு நான்கு விதைகளை ஒரு செ.மீ. ஆழத்துக்குள் ஊன்றவும். பகுதி நிழலில் வளர்க்க வேண்டும். பூ வாளியால் நீரூற்றலாம். நாற்றுக்கள் 60 நாள்களில் தயாராகும்.

நடவு முறை: ஒன்றரை கனஅடி அளவுள்ள குழிகளில் வரிசைக்கு வரிசை 6 அடி, செடிக்குச் செடி 6 அடி என்ற இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

நீர்ப்பாசனம்: நடவு செய்தவுடன் நீர்ப்பாய்ச்ச வேண்டும். பின்னர், வாரத்துக்கு ஒரு முறையும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். நுண்ணீர்ப் பாசனம் அமைத்து நீர்ப்பாய்ச்சுவது சிறந்தது.

உரமிடுதல்: அடியுரம் இடும்போது குழிக்கு 10 கிலோ தொழுஉரம் இட வேண்டும். மரம் ஒன்றுக்கு 50 கிராம் தழைச்சத்து தரவல்ல 110 கிராம் யூரியா, 50 கிராம் மணிச்சத்து தரவல்ல 315 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் சாம்பல்சத்து தரவல்ல 80 கிராம் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். நடவு செய்த மூன்றாவது மாதம் முதல் 2 மாதங்களுக்கு ஒருமுறை இட வேண்டும். மரம்

ஒன்றுக்கு 20 கிராம் அசோஸ்பைரில்லம், 20 கிராம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை நடவின்போதும், நடவு செய்த ஆறாவது மாதமும் இட வேண்டும்.

பின்செய் நேர்த்தி: பூக்கள் தோன்றியதும் நன்கு பழம் பிடிக்க 20 பெண் மரங்களுக்கு ஒரு ஆண் மரம் என்ற விகிதத்தில் வைத்துக்கொண்டு எஞ்சிய ஆண் மரங்களை அகற்றிவிட வேண்டும்.

நுண்ணூட்டங்கள்: பயிர் வளர்ச்சிக்கும், பழம் பிடிக்கவும் அரை சதவீத சிங்சல்பேட் மற்றும் 0.1 சதவீத ஹைட்ரஜன் போராக்சைடு இரண்டையும் சேர்த்து, நட்ட 4, 8-ஆவது மாதங்களில் தெளிக்க வேண்டும்.

வேர் அழுகல் நோய்: நீர் தேங்கியுள்ள இடங்களில் வேர் அழுகல் மற்றும் வாடல் நோய் ஏற்படலாம். நல்ல வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டியது அவசியம். ஒரு சதவீத போர்டா கலவையை வேர்ப்பாகம் நனையும்படி ஊற்றி இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம்.

பப்பைன் பிரித்தெடுத்தல்: பப்பாளிக்காய் பாலில் இருந்து பெறப்படும் பொருள் பப்பைன். இது ஏராளமான தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தப்படுவதாகும். இறைச்சி, துணி வகை, தோல்களைப் பதனப்படுத்தவும், மென்மைப்படுத்தவும் உதவுகிறது. பப்பாளிக்காயில் இருந்து பப்பைனை பிரித்து எடுப்பது மிகவும் சுலபம். முற்றிலும் முதிராத காய்களில் இருந்து பிரித்தெடுக்கலாம். பிளேடு அல்லது சிறிய கத்தியால் 0.3 செ.மீ. ஆழத்துக்கு கோடு கிழித்து பால் சேகரிக்க வேண்டும். காலை 10 மணிக்குள் சேகரிக்க வேண்டும். மூன்று நாள்கள் இடைவெளியில் இதேபோல் 4 முறை சேகரித்து அந்தப் பாலை அலுமினியம் டிரேயில் வைத்து நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர், சல்லடையில் சலித்து வேறு பொருள்களை நீக்கி பப்பைனை எடுக்கலாம்.

அறுவடை மற்றும் மகசூல்: 24 முதல் 30 மாதங்கள் வரை பலன் தரும். கோ 2, 5 ரகத்தில் ஹெக்டேருக்கு 200 முதல் 250 மெட்ரிக் டன் மகசூல் கிடைக்கும். கோ 7-ல் 200 முதல் 225 மெ.டன், கோ 3-ல் 100 முதல் 120 மெ.டன், கோ 6-ல் 120 முதல் 160 மெட்ரிக் டன் மகசூல் கிடைக்கும்.

பப்பைன் மகசூல்: கோ 2 ரகத்தில் ஹெக்டோருக்கு 600 கிலோவும், கோ 5-ல் 800 கிலோவும் மகசூல் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள தோட்டக்கலைத் துறை அலுவலகங்களை அணுகி பயன்பெறலாம் என தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**இறைவைக்கு ஏற்ற மணிலா சாகுபடி**



இந்த இறைவைப் பருவத்தில் மணிலா சாகுபடி செய்து அதிக பயனடையலாம் என வேளாண் துறையினர் யோசனைத் தெரிவித்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் நெல்லுக்கு அடுத்தபடியாக அதிகம் பயிரிடப்படும் பயிர் மணிலா. ஆடி மாதத்தில், மானாவாரி பயிராக மணிலா சாகுபடி செய்யப்படும். மேலும் கிணற்றுப் பாசனத்தில் கார்த்திகை, மார்கழி மாதத்தில் இறைவைப் பயிராகவும் மணிலாவை சாகுபடி செய்யலாம்.

விழுப்புரம் மாவட்டத்தில் ஆண்டுக்கு 79,804 ஹெக்டரில் மணிலா பயிரிடப்படுகிறது.

இந்த இறைவையில் பயிரிடப்பட்டுள்ள மணிலா செடிக்கு ஊட்டச்சத்து கரைசலைத் தெளிப்பதன் மூலம் அதிக மகசூலை பெற முடியும் என வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

ஊட்டச்சத்து கரைசல் தயாரிக்கும் முறை: டி.ஏ.பி. உரம் ஒரு கிலோ, அமோனியம் சல்பேட் 400 கிராம், போரக்ஸ் (வெண்காரம்) 200 கிராம் ஆகியவற்றை 15 லிட்டர் தண்ணீரில் ஒன்றாகக் கலந்து ஒரு இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். மறுநாள் காலையில் இக் கலவையை வடிகட்டினால், 13 லிட்டர் வரை தெளிந்த

ஊட்டச்சத்துக் கரைசல் கிடைக்கும். இதை 187 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து 200 லிட்டர் என்ற அளவில் கரைசலை தயார் செய்ய வேண்டும். இந்த கரைசலை விதைத்து 25 நாளில் ஒரு முறையும், 10 நாள் இடைவெளிவிட்டு 35-ம் நாள் ஒரு முறையும் செடிகளில் தெளிக்க வேண்டும்.

இதேபோல் மணிலாவுக்கு வளர்ச்சி பருவத்தில் ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் இட வேண்டும். இதில் 80 கிலோவை அடியுரமாகவும் இடலாம். பின்னர் பயிர் வளர்ச்சிப் பருவத்தில் 40 முதல் 45 நாள்களில் 2-வது களை எடுக்கும் தருணத்தில் 80 கிலோ ஜிப்சம் இட்டு நன்றாக கொத்தி மண் அணைப்பதன் மூலம் மணிலா செடியில் காய்ப்பிடிப்புத் திறன் அதிகரிக்கும்.

பூச்சிகளை கட்டுப்படுத்த: மணிலாவில் சுருள் பூச்சி மற்றும் புரூடினியா அதிகம் தாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன. சுருள் பூச்சியைக் கட்டுப்படுத்த விதை விதைப்பின்போது எட்டு வரிசைக்கு ஓர் வரிசை கம்பு விதைப்பு செய்ய வேண்டும். புருட்டீனியாவை கட்டுப்படுத்த வரப்பு ஓரங்களில் ஆமணக்கு சாகுபடி செய்வது சிறந்தது.

மண் பரிசோதனை செய்து அதில் உள்ள சத்துகளுக்கு ஏற்றவாறு உரமிடுவது, பூச்சிகளை கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவது ஆகியவற்றை அருகில் உள்ள வேளாண்மைத் துறை அலுவலகங்களை தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

**29-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் நவம்பர் 29-ல் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்ட செய்தி குறிப்பு:

இந்த ஆண்டின் நவம்பர் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் நவம்பர் 15ஆம் தேதி காலை மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் நடைபெற இருந்ததாக ஏற்கெனவே அறிவிப்பு வெளியாகி இருந்தது. வரும் நவம்பர் 14ஆம் தேதி கொண்டாடப்பட இருந்த மொஹரம் பண்டிகை வரும் நவம்பர் 15ஆம் தேதிக்கு கொண்டாடப்பட உள்ளது. மேற்படி தேதியில் அரசு விடுமுறை

விடப்பட்டுள்ளதால் அன்று நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் இம் மாதம் 29ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனவே மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சங்க பிரதிநிதிகளும், விவசாயிகளும் வரும்

29-ல் நடைபெற இருக்கும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் கோரிக்கைகளை மனுவாக அளித்துப் பயனடையலாம் என தெரிவித்துள்ளார்.

**ரப்பர் விலை வீழ்ச்சியைத் தடுக்கக் கோரி விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

ரப்பர் விலை வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்திட வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

குலசேகரம் அரசமூடு சந்திப்பில் நடைபெற்ற இப்போராட்டத்துக்கு விவசாயிகள் சங்க திருவட்டாறு வட்டாரச் செயலர் ஜே. சதீஸ் தலைமை வகித்தார்.

இதில், மாவட்டத் தலைவர் ஜே. சைமன் சைலஸ், துணைத் தலைவர் எஸ். நாராயணன், மாவட்டச் செயலர் ஆர். செல்லசாமி, துணைச் செயலர் பி. ரவி, பொருளர் எஸ். விஜி, விவசாயத் தொழிலாளர் சங்க வட்டாரச் செயலர் சி. தங்கமணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரச் செயலர் எஸ்.சி. ஸ்டாலின்தாஸ், தோட்டம் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலர் எம். வல்சகுமார், குலசேகரம் பேரூராட்சி துணைத் தலைவர் சுபாஷ்கென்னடி மற்றும் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

போராட்டத்தில் ரப்பர் இறக்குமதியை தடுத்து நிறுத்தி, உள்நாட்டில் ரப்பர் விலை வீழ்ச்சியைத் தடுக்க வேண்டும். ரப்பருக்கு கிலோ ரூ. 200 என விலை நிர்ணயம் செய்ய வேண்டும். தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**அணைகளின் நீர்மட்டம் மேலும் உயர்வு**

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் அடவிநயினார், கருப்பாநதி அணைகளின் நீர்மட்டம் புதன்கிழமை மேலும் 2 அடி உயர்ந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் புதன்கிழமை பாளையங்கோட்டை, மேலப்பாளையம், சுத்தமல்லி உள்பட்ட பல்வேறு பகுதியில் மிதமான மழை பெய்து வருகிறது.

புதன்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை அளவு (மி.மீட்டரில்): பாளையங்கோட்டை 6.8, மூலைக்கரைப்பட்டி 10, களக்காடு 3.8, பாபநாசம் அணை 2, சேர்வலாறு அணை 4, மணிமுத்தாறு அணை 1.2, கடனாநதி அணை 4, கருப்பாநதி அணை 6, வடக்குப் பச்சையாறு அணை 3.8, கொடுமுடியாறு அணை 10.

அணைகளின் நீர்மட்டம் நிலவரம்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 90.40 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 100.52 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 66.30 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 54 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 54.75 அடியாகவும் இருந்தது. பாபநாசம் அணைக்கு நொடிக்கு 1156.51 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 178 கனஅடியும், கடனாநதி அணைக்கு 76.46 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 80 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 92 கனஅடியும், பேச்சிப்பாறை அணைக்கு 382 கனஅடியும், பெருஞ்சாணி அணைக்கு 174 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாசனத்துக்கு பாபநாசம் அணையிலிருந்து 1147.25 கனஅடியும், மணிமுத்தாறு அணையிலிருந்து 35 கனஅடியும், கடனாநதி அணையிலிருந்து 45 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 30 கனஅடியும், கருப்பாநதி அணையிலிருந்து 25 கனஅடியும், அடவிநயினார் அணையிலிருந்து 45 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்துவருவதால் பாபநாசம் பாணதீர்த்த அருவி, அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

**நாகை: 8 இடங்களில் விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

நாகை மாவட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (மார்க்சிஸ்ட் சார்பு) சார்பில் 8 இடங்களில் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

2012-13-ம் ஆண்டுக்கான பயிர்க் காப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க வேண்டும். ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 150 நாள்கள் பணி வாய்ப்பும், தினக் கூலி ரூ. 148-ம் வழங்க வேண்டும். கோமாரி நோய் தாக்குதலால் கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். கோவில் நிலங்களில் குடியிருப்போருக்குப் பட்டா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாகப்பட்டினம்: நாகை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க நாகை ஒன்றியச் செயலர் கோ.முருகையன் தலைமை வகித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் வி. மாரிமுத்து சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்.

விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் வி. அமிர்தலிங்கம், மார்க்சிஸ்ட் மாவட்டக் குழு உறுப்பினர்கள் பி.கே. ராஜேந்திரன், பி. செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கீழ்வேளூர்: ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க ஒன்றியச் செயலர் எம்.என். அம்பிகாபதி தலைமை வகித்தார். கீழ்வேளூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் நாகை மாலி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசினார்.

திருக்குவளை:ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் வி. சுப்பிரமணியன் தலைமை வகித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் ஏ.வி. முருகையன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசினார்.

தலைஞாயிறு: ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க ஒன்றியச் செயலர் எஸ்.முருகேசன் தலைமை வகித்தார்.

மார்க்சிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலர் ஏ.வேணு மற்றும் விவசாய சங்கங்களின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வேதாரண்யம்: ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க ஒன்றியச் செயலர் எம்.ஏ. செங்குட்டுவன் தலைமை வகித்தார். மார்க்சிஸ்ட் மாவட்டக் குழு உறுப்பினர் வி.

அம்பிகாபதி, விவசாயிகள் சங்க ஒன்றியத் தலைவர் எம். முத்துராமலிங்கம், விவசாயத் தொழிளாளர் சங்க ஒன்றியத் தலைவர் ஏ.வெற்றியழகன் ஆகியோர் பேசினர்.

பொறையாறு: ஆர்ப்பாட்டத் துக்கு விவசாயிகள் சங்க வட்டச் செயலாளர் டி.ராசையன் தலைமை வகித்தார். மாவட்டப் பொருளாளர் ஏ. லத்தீப், மாவட்டக் குழு உறுப்பினர் டி. ஜெகதீசன், வட்டத் தலைவர் யு. சண்முகம் ஆகியோர் பேசினர்.

குத்தாலம், சீர்காழி

குத்தாலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் எஸ். துரைராஜ் தலைமை வகித்தார்.

சீர்காழியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க வட்டச் செயலாளர் கே. நாகையா தலைமை வகித்தார்.

கட்சியின் வட்டச் செயலாளர் சி.வி.ஆர். ஜீவானந்தம் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடிக்க வலியுறுத்தல்**

விவசாயிகள் ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்றார் கிரிப்கோ நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர் குளோரியா.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகே உள்ள அன்னமங்கலம் கிராமத்தில், இந்திய உரக் கூட்டமைப்பு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் மற்றும் கிரிப்கோ உர நிறுவனம் சார்பில் புதன்கிழமை நடைபெற்ற மண்வள மேம்பாடு குறித்த கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

இந்தியாவில், 60% சாகுபடி நிலங்களில் ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ளது. இதைத் தவிர்க்க, ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடிக்க வேண்டும். பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பு மண் பரிசோதனை செய்து, நிலத்திற்கு தேவையான உரங்களை இட வேண்டும்.

இவ்வாறு உரமிடும்போது, ரசாயன உரங்களை மட்டும் இடாமல், தொழு, உயிர், பேரூட்ட மற்றம் நுண்ணூட்ட உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் சரியான தருணத்தில் அளிப்பதன் மூலம், மண்ணில் உள்ள சத்துப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுவதோடு கூடுதல் மகசூல் பெறலாம்.

நிலத்தில் இடக்கூடிய ரசாயன உரங்கள், பயிருக்கு கிடைக்கக்கூடிய தன்மைக்கு மாற்றம் பெறுவதற்கு உயிர் உரமும், தொழு உரமும் மிகவும் அவசியமானது. இவற்றை பயன்படுத்தாத நிலங்களில் இடக்கூடிய உரங்கள் வீணாகிவிடும் என்றார் அவர்.

தொடர்ந்து, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன்  நுண்ணூட்டச் சத்துக்களின் அவசியம் குறித்து பேசினார்.

கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிகளுக்கு மரக்கன்றுகள், வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், கிரிப்கோ நிறுவனத்தின் மாநில மேலாளர் அருணாச்சலம், மண்டல மேலாளர் ராம்குமார், உதவி மேலாளர் மு. ஜெகநாதன், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய மண் ஆய்வக தொழில்நுட்பவியலர் என். சதீஷ்குமார், ரோவர் வேளாண் கல்லூரி பேராசிரியர் முனைவர் ஹரிராம், உதவிப் பேராசிரியை பரமேஸ்வரி, தோட்டக்கலை அலுவலர் ஆனந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பி. வெங்கடேசன் வரவேற்றார். இந்திய உரக் கூட்டமைப்பு புள்ளியியல் துறை அலுவலர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

**உணவு பதப்படுத்தல் தொழிலுக்கு 25 சதம் மானியம்**

உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு 25 சதம் மானியம் வழங்கப்பட உள்ளதாக தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேசிய உணவு பதப்படுத்துதல் இயக்கக்கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது:

தருமபுரி மாவட்டத்தில் வேளாண் உற்பத்தி பொருள்களை சந்தைப்படுத்திடவும், தொடர்புடைய தொழில்களை மேற்கொள்ளவும், உற்பத்தி பொருள்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய உணவு பதப்படுத்துதல் இயக்கத்தின் மூலம் புதிய அரிசி ஆலை துவங்கவும், பழைய அரிசி ஆலைகளை புதுப்பிக்கவும், உணவு பதப்படுத்துதல் தொழில்சாலைகள் அமைக்கவும் மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்கப்படுகின்றன.

இதில், புதிய தளவாடம் வாங்கிட அதன் மதிப்பில் 25 சதமும், அதிகபட்சமாக ரூ.50 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

அதேபோல, குளிர்பதன வாகனம் வாங்க அதன் மதிப்பில் 50 சதமும், அதிகபட்சமாக ரூ.50 லட்சம் மானியம் வழங்கப்படும்.

நவீன இறைச்சி கூடம் அமைக்க 50 மானியம், அதிக பட்சமாக ரூ.5 லட்சம் மானியம் வழங்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் தொழில்முனைவோருக்கு மாவட்ட தொழில் மையம் மூலம் ஒவ்வொரு தொழில்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. இது குறித்த விவரங்களை மாவட்ட தொழில்மையத்திற்கு நேரில் சென்று தெரிந்து கொள்ளலாம்.

நெல் உமியிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழில், சம்மங்கி பூவிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழில் செய்யவும் அதனை ஏற்றுமதி செய்யவும் மாவட்டத்தில் வாய்ப்புள்ளது. இதற்கான உதவிகள் மற்றும் வழிகாட்டுதல் உரிய துறைகள் மூலம் வழங்கப்படும்.

தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பொருள்களை தரம் பிரித்து, பதப்படுத்தி மதிப்புக்கூட்டி விற்பனை செய்திட விவசாயிகள், தொழில்முனைவோர்கள் முன்வரவேண்டும். அதற்கான அனைத்து தொழில்நுட்பம் மற்றும் அரசுத்திட்ட உதவிகள் தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்

வணிகத்துறை மூலம் வழங்கப்படும். இதனை விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் தொழில்முனைவோர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

கூட்டத்தில், வேளாண் இணை இயக்குநர் பொ.மனோகரன், துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) செல்வம், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் க.செல்வி, தமிழ்நாடு தொழில் முதலீட்டு அலுவலர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் முன்னோடி விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

**கோமாரி நோயால் கால்நடைகள் இறப்பு: இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து கூட்டமைப்பின் செயலாளர் செ.நல்லசாமி புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை: கோமாரி நோய், கால்நடைகளைத் தாக்கும் வைரஸ் நோயாகும். இதில் சுமார் ஏழு வகையான வைரஸ் தாக்குதல் உள்ளது. ஆறு மாதத்திற்கு ஒரு முறை தடுப்பூசி போடுவதன் மூலம் இந்நோய் தாக்குதலை தடுக்க முடியும். ஆனால் நோய் பாதித்த பின் தடுப்பு மருந்துகள் இல்லை.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் இந்நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது. இந்தியா போன்ற நாடுகளில் ஒருங்கிணைந்த தடுப்பு நடவடிக்கை செய்யத் தவறியதன் காரணமாக, நோய் தாக்குதல் அதிகரித்து பெரிய அளவில் இழப்பை ஏற்படுத்தி வருகிறது.

காற்று, தண்ணீர் மற்றும் கால் செருப்பு மூலமாகவும் எளிதில் நோய் பரவும். இந்த நோய் நீங்கும் வரை, கால்நடைச் சந்தைகளை மூட வேண்டும். அதே போல கால்நடைகளை வாங்குவதையும், விற்பதையும் தவிர்க்க வேண்டும்.

அதே நேரத்தில் கோமாரி நோயால் இறக்கும் கால்நடைகளை உடனடியாக புதைக்க வேண்டும். மாறாக ஆற்றிலும், கால்வாய்களிலும் போடக் கூடாது.

நோய்த் தாக்குதல் இல்லாத மற்ற இடங்களில் போர்க்கால அடிப்படையில் தடுப்பூசி போடுவது அவசியம்.

தமிழகத்திலும் அண்டை மாநிலங்களிலும் கோமாரி நோய் தாக்குதலால் ஆயிரக்கணக்கான ஆடு, மாடுகள் உயிரிழந்துள்ளன. கால்நடை காப்பீட்டு திட்டத்தின் கீழ் கோமாரி நோய்க்கு இழப்பீடு வழங்கப்படுவதில்லை. எனவே காப்பீடு இருந்தாலும், இல்லாவிட்டாலும் கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்றார்.

**கால்நடைகளுக்கு தடுப்பூசி போட ஆட்சியர் அறிவுறுத்தல்**

கோமாரி நோயில் இருந்து பாதுகாக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி போட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட செய்தி: தமிழகத்தில் கோமாரி நோயின் தாக்கம் காரணமாக கலப்பின பசுக்கள் இறந்து வருகின்றன. இதையடுத்து கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 2.30 லட்சம் தடுப்பூசி டோஸ்கள் பெறப்பட்டு, இதுவரை 2,27,600 டோஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

வைரஸ் நச்சுக்கிருமியினால் இந்நோய் ஏற்படுவதால் தடுப்பூசி மூலமே கால்நடைகளை பாதுகாக்க முடியும்.

கோவை மாவட்டத்திற்கு அருகில் உள்ள பகுதிகளில் கோமாரி நோய் பாதிப்பால் கால்நடைகள் உயிரிழந்து வருகின்றன. எனவே விடுபட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளவும், அருகிலுள்ள

சந்தைகளில் கால்நடைகளை வாங்குவதை தவிர்க்கு

மாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நோய் அறிகுறி தென்பட்டால் அருகிலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்களை தொடர்பு கொண்டு தடுப்பூசி மற்றும் மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவுறுத்தியுள்ளார்.

**சேவூரில் ரூ.70.8 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்: விலை அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி**

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.70.8 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்போனது. நிலக்கடலை வரத்து குறைந்து, விலை அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர் .

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற ஏலத்தில் இந்த வாரம் 5000 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. மொத்தம் ரூ.70.8 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலத்தில் விற்பனையானது.குவிண்டால் ஒன்றுக்கு (காய்ந்த) முதல் ரக நிலக்கடலை ரூ.4200 முதல் ரூ4620 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை ரூ3850 முதல் ரூ4240 வரையிலும், பச்சை நிலக்கடலை ரூ.1500 முதல் ரு1920 வரையிலும் ஏலம் போனது.

மங்கரசவலையபாளையம், அவினாயிபுதூர், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், அன்னூர் ஆகிய பகுதிகளில் இருந்து 800 விவசாயிகளும், 26 வியாபாரிகளும் பங்கேற்றனர்.குவிண்டாலுக்கு வழக்கத்தைவிட கூடுதலாக ரூ.400 வரை விலை அதிகரித்து கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இதுகுறித்து சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் சண்முகம் கூறியது: நிலக்கடலை சீசன் துவங்கியுள்ளது. கடந்த ஒரு மாதமாக மழை பெய்ததால், நிலக்கடலை வரத்து உயர்ந்து வருகிறது என்றார்.

**பவானிசாகர் நீர்மட்டம் 68.37 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 68.37 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,811 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 750 கன அடி நீரும், வாய்க்காலில் 1,950 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 10.28 டி.எம்.சி.

**முட்டைக்கோஸ் கிலோ ரூ.12 ஆக உயர்வு**

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள தாளவாடி மலை கிராமங்களில் முட்டைக்கோஸ் சாகுபடி பரப்பளவு குறைந்துவிட்டதால், கடந்த ஆண்டு கிலோ ரூ.2-க்கு விற்கப்பட்ட முட்டைக்கோஸ் விலை, இப்போது ரூ.12 ஆக உயர்ந்துள்ளது.

சத்தியமங்கலம் வனக்கோட்டம், தாளவாடியை அடுத்துள்ள எரணஹள்ளி, திகினாரை, ஜீரஹள்ளி, கல்மண்டிபுரம், அருள்வாடி, கெட்டவாடி, தமிழ்புரம், நெய்தாளபுரம் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் கடந்த ஆண்டு ஆயிரக்கணக்கான ஏக்கரில் நீலகிரி, சேன்டேஸ், கணேஷ் போன்ற பல்வேறு ரக முட்டைக்கோஸ்களை விவசாயிகள் சாகுபடி செய்தனர். இதன் உற்பத்தி பன்மடங்காக அதிகரித்தால் விலை கிலோ ரூ.2 ஆகச் சரிந்தது. இதனால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தைச் சந்தித்தனர்.

இதன் காரணமாக, இந்தாண்டு கோஸ் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. மஞ்சள், மக்காச்சோளம், மரவள்ளிக்கிழங்கு போன்ற பயிர்களுக்கு மாறினர். கடந்த ஆண்டு சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பில் 20 சதவீதம் மட்டுமே, அதாவது 500 ஏக்கரில் மட்டுமே நடப்பாண்டு முட்டைக்கோஸ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சூசைபுரம், திகினாரை, மல்லன்குழி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நல்ல விலை கிடைக்கும் நம்பிக்கையுடன் முட்டைக்கோஸ் பயிட்டுள்ளனர்.

சொட்டு நீர்ப் பாசனம் மூலமாக கோஸ் உற்பத்தி செய்யப்படுவதால் குறைந்தளவு தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருகின்றனர். இதன் பருவகாலம் 80 முதல் 90 நாள்கள். ஏக்கருக்கு 20 டன் வரை மகசூல் கிடைப்பதால் நீலகிரி ரக முட்டைக்கோஸ்க்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். கடந்த மாதம் கிலோ ரூ.5-க்கு விற்கப்பட்ட கோஸ், இப்போது ரூ.12 வரை விற்பனையாகிறது. ஈரோடு, மேட்டுபாளையம் கோஸ் மண்டி வியாபாரிகள் இக் கிராமங்களுக்கே வந்து நேரடிக் கொள்முதல் செய்கின்றனர்.

இதுகுறித்து, முட்டைக்கோஸ் விவசாயி மல்லன்குழி கந்தசாமி கூறியது:

நவம்பரில் மழை பெய்தால் முட்டைக்கோஸ் அழுகிவிடும் என்பதால் விவசாயிகள் அ தைப் பயிரிடவில்லை. கடந்த ஆண்டு கோஸý்க்கு சரியான விலை கிடைக்காததால் இந்தாண்டு அதன் பரப்பளவு குறைந்துவிட்டது. இப்போது, சில இடங்களில் முட்டைக்கோஸ் அறுவடை செய்யும் தருணத்திலும், செப்டம்பரில் பயிரிடப்பட்ட கோஸ், இப்போது மொட்டு விடும் தருணத்திலும் உள்ளது. முட்டைக்கோஸ் வரத்து குறைந்து விட்டதால் இப்போது கிலோ ரூ.12 வரை விற்பனையாகிறது. மேலும், கோடை காலத்தில் அறுவடை செய்யும் வகையில் தாளவாடி விவசாயிகள், தர்ப்பூசணியை சாகுபடி செய்யத் தயாராகி விட்டதால் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. கர்நாடக மாநிலம் ஹாசன் பகுதியில் முட்டைக்கோஸ் உற்பத்தி குறைந்துள்ளதால் நடப்பாண்டு இங்குள்ள முட்டைக்கோஸ் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்றார்.

**இன்று உதகையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உதகையில் வியாழக்கிழமை (நவம்பர் 14) நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் (பொ) என்.மணி தெரிவித்துள்ளதாவது:

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (நவம்பர் 15) காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தலைமையில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நிர்வாகக் காரணங்களுக்காக இக்கூட்டம் வியாழக்கிழமை

(நவம்பர் 14) காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. மாவட்ட விவசாயிகள், விவசாயம் தொடர்பான தங்களது கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

**கம்பம் பகுதியில் மொச்சை செடியில் புழுக்கள் தாக்கம்: தடுக்க விவசாயிகள் முயற்சி**

கம்பம் பகுதியில் மானாவாரி காடுகளில் பயிரிடப்பட்டுள்ள மொச்சை செடியில் புழுக்களின் தாக்கம் அதிகரித்துள்ளதால், அதனைத் தடுக்க விவசாயிகள் போராடி வருகின்றனர்.

கம்பம், கம்பமெட்டு சாலை, ஏகலூத்து, மணிகட்டி ஆலமரம் பகுதி, கூடலூர் பகுதி, கல்உடைச்சான்பாறை, கழுதைமேடு, சத்திரவு, வாழ்த்துபடுகை, பளியன்குடி புதுரோடு, எள்கரடு போன்ற மானாவாரி காடுகளில், அதிகளவில் மொச்சைக் காயை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். ஐப்பசி முதல், மொச்சைக்காய் சந்தைக்கு விற்பனைக்கு வரத் தொடங்கிவிடும். ஆரம்பத்தில் வரத்து குறைவாக இருந்ததால், விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் ரூ. 40-50 வரை கொள்முதல் செய்தனர்.

இப்பகுதி விளையும் மொச்சைக்காய்களை, திண்டுக்கல், தேனி, ஒட்டன்சத்திரம், வத்தலகுண்டு, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். இதனால், வரத்து அதிகரிக்கும்போது, விலை ரூ. 20-க்கு குறையாமல் இருக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இந்நிலையில், தை மாத இறுதி வரை வரத்துள்ள மொச்சை சாகுபடி, கடந்த சில நாள்களாக பெய்த திடீர் மழையால், அதில் புழுக்கள் அதிகரித்துள்ளன. இந்த புழுக்கள் மொச்சையிலுள்ள பூ, பிஞ்சுகளை உதிர்த்து விடுகின்றன. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தற்போது, பல்வேறு பூச்சிக் கொல்லிகளை தெளித்தும் இந்த புழுக்களை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் போராடி வருகின்றனர்.

**பருவ மழை இல்லாததால் திருப்புவனம் பகுதி விவசாயிகள் பாதிப்பு**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பகுதிகளில் மழை சரிவர பெய்யாததால் விவசாயப் பணிகளை தொடர முடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு பருவ மழை பெய்யத் தொடங்கியதும் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் விவசாயப் பணிகளை மும்மரமாக தொடங்கினர். தற்போது முதல் கட்ட விவசாயப் பணிகள் மட்டுமே நிறைவடைந்த நிலையில் கடந்த சில தினங்களாக மழை பெய்ய வில்லை. தற்போது மழை பெய்யாததால் நடவு செய்த நெற்பயிரையும், மிளகாய்ச் செடியையும் காப்பாற்றுவதற்காக ஆங்காங்கே பள்ளத்திலும், குட்டையிலும் உள்ள நீரை இறாமரம் மூலமாகவும், டீசல் மோட்டார் மூலமும் இரைத்து காப்பாற்றுகின்றனர். இந்நிலை மேலும்

நீடித்தால் தாங்கள் மிகுந்த பாதிப்படைவோம் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**கூட்டுறவு சங்கங்கள் மூலம்  ரூ.60 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு**

வரும் டிசம்பர் மாதத்திற்குள் வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ.60 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் ப. உமா மகேஸ்வரி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

மத்திய கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ.60 கோடி பயிர் கடன் வழங்கப்பட உள்ளது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிஷான் கிரடிட் கார்டு மூலம் ரூ.78 கோடி காசுக் கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்களில் கடந்த நவ. 7ஆம் தேதி வரை 4,902 உறுப்பினர்களுக்கு ரூ.18.7 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி உறுப்பினர்கள் 816 பேருக்கு ரூ.2.95 கோடியும், புதிய உறுப்பினர்கள் 1,274 பேருக்கு ரூ.5.29 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதால், நெல் பயிரிடுவதற்காக பயிர் கடன் வழங்கப்பட உள்ளது. வரும் டிசம்பர் மாதத்திற்குள் ரூ.60 கோடி பயிர் கடன் வழங்க உள்ளதாக மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.


**கால்நடைகளுக்கான மூலிகை மருத்துவ பயிற்சி முகாம்**

கால்நடைகளுக்கு பரவி வரும் நோய்களைத் தடுக்க மூலிகை மருத்துவ முகாம் காஞ்சிபுரத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெற்ற இந்த முகாமில் தமிழ்நாடு கால்நடை விரிவாக்க கல்வி இயக்குனர் சந்தரஹாசன் கலந்து கொண்டு பேசினார். கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை குணப்படுத்த, இருளர் பழங்குடியினத்தவர் பின்பற்றும் மூலிகை மருத்துவ நோய் தடுப்பு முறை குறித்து முகாமில் விளக்கப்பட்டது.  இருளர் இனப் பெண்கள், பழங்குடி நல மைய

இயக்குனர் ராஜேந்தின் கலந்து கொண்டு பேசினார். வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் குமாரவேல் உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர். கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வங்கக் கடலில் புயல் சின்னம்**



வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) வலுவடைந்து காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக உருவெடுத்துள்ளது. சென்னைக்கு அருகே 650 கிலோ மீட்டர் தூரத்தில் அது நிலை கொண்டிருப்பதால் வட தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை (நவ.15) முதல் கனமழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியதாவது: அந்தமான் கடல் பகுதிக்கு அருகில் கடந்த சில நாள்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவானது. சென்னையில் இருந்து 800 கிலோ மீட்டர் தொலைவில் உருவான தாழ்வுப் பகுதி தற்போது காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளது. சென்னைக்கு 650 கிலோ மீட்டர் தூரத்திலும் நாகப்பட்டினத்துக்கு 680 கிலோ மீட்டர் தூரத்திலும் தற்போது அது நிலைகொண்டுள்ளது.

இது வியாழக்கிழமையன்று மேலும் வலுப்பெற்று ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்புள்ளது. அது மேற்கு, வட மேற்கு திசையில் நகர்ந்து நாகப்பட்டினம் - சென்னை இடையே வெள்ளி இரவு அல்லது சனிக்கிழமை காலையில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு முன் தாழ்வு மண்டலம் புயலாக மாறவும் வாய்ப்புகள் உள்ளது.

நாளை முதல் கனமழை: இதன் காரணமாக வெள்ளிக்கிழமை மாலையில் இருந்து வட தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழையோ அல்லது 250 மில்லி மீட்டருக்கும் அதிகமான கன மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம்: காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக கடலில் 55 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும். இதனால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடலுக்குள் சென்றுள்ள மீனவர்கள் உடனடியாக கரைக்குத் திரும்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**எச்சரிக்கைக் கூண்டு:**

சென்னை, நாகப்பட்டினம் மற்றும் கடலூர் துறைமுகங்களில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் அருகில் உள்ளது என்பதைக் குறிக்கும் எச்சரிக்கைக் கூண்டுகள் ஏற்றப்பட்டுள்ளன. புதுச்சேரி, எண்ணூர், காட்டுப்பள்ளி, தூத்துக்குடி துறைமுகங்களிலும் எச்சரிக்கைக் கூண்டுகள் ஏற்றப்பட்டுள்ளன.

தாழ்வு மண்டலம் தீவிரமடையும் பட்சத்தில் துறைமுகங்களில் புயல் அபாயத்தைக் குறிக்கும் எச்சரிக்கைக் கூண்டுகள் ஏற்றப்படும் என்று வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னறிவிப்பு: ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் உள்ளிட்ட இடங்களில் வியாழக்கிழமை பரவலாக மழை பெய்யும். மாநிலத்தின் பிற மாவட்டங்களின் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

புதன்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): குளச்சல் - 10, கன்னியாகுமரி இரணியல் - 90, தக்கலை - 80, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை - 60, குளித்துறை, திருச்செந்தூர், தூத்துக்குடி, சாத்தான்குளம் - 50, நாகர்கோயில் - 40.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**14.11.2013**

## விவசாயிகள் விதை வாங்கும் போது கவனிக்க வேண்டிய வழிமுறைகள்

தூத்துக்குடி, : விவசாயிகள் விதை வாங்கும்போது கீழ்கண்ட வழிமுறைகளை கடைப்பிடிக்க
வேண்டுமென விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் கூறியதாவது, உற்பத்தி செய்ய விரும்பும் பயிர் ரகம் பற்றி முன்னதாகவே முடிவு செய்து கொள்ள வேண்டும். விற்பனைக்குட்படுத்தப்படும் விதைப் பைகளில் விபர அட்டை அல்லது விதை சான்றுத்துறையினரால் வழங்கப்பட்டிருக்கும் சான்றட்டை பொருத்தப்பட்டுள்ளதா என்பதைக் கவனித்து வாங்க வேண்டும். எவ்வித விபரமும் இல்லாது மூட்டைகளிலோ அல்லது பைகளிலோ விற்பனை செய்யப்படும் விதைகளை வாங்குதல் கூடாது. சான்று பெற்ற விதையை
கேட்டு வாங்குகள். அதுவும் பிரிக்கப்படாத முழுப்பைகளாக வாங்குதல் நலம். விபர அட்டை அல்லது சான்றட்டைகளில் கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களை முக்கியமாக விதைப் பரிசோதனை நாள், காலக்கெடு தேதியினை கவனித்து வாங்க வேண்டும்.
காலக்கெடு முடிந்த விதையை வாங்குவது வாங்குபவரின் சொந்த பொறுப்பாகும். அட்டையில் கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களில் முக்கியமாக பயிரின் ரகம், விதைப் பரி
சோதனை நாள், காலவரம்பு தேதி அடித்தல் செய்யப்பட்டோ அல்லது திருத்தம் அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதனை கவனிக்க வேண்டும். அப்படி காணப்படின் அத்தகைய விதைகளை வாங்குதல் கூடாது. விதைப்பைகள் மீது சான்றுத்துறையினரின் சின்னம் வாசகங்கள் காணப்படினும் சான்றட்டை இல்லாது இருப்பின் விதைகளை வாங்காதீகள். சான்றட்டை இல்லாத விதைகளை சான்று விதைகள் என்ற உறுதியிட்டு கூறமுடியாது. சான்றளிப்புத் துறையினரின் சான்றிதழ் சின்னம் பதித்த பைகளில் விபர அட்டை பொருத்தப்பட்டு விற்பனை செய்யப்படுவது சட்ட விதிகளுக்குப் புறம்பானது. அந்த விதைகளை சான்று விதை என்று தவறாக எண்ணி வாங்காதீர்கள். பைகளில் இணைக்கப்பட்டிருப்பது

சான்றட்டைதானா என்பதைக் கவனித்து வாங்குங்கள். விற்பனையாளர்களிடம், விதை வாங்கியதற்குரிய ரசீதினை கேட்டுப் பெறுங்கள் என விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் நாராயணப்பிரசாத் அறிவிக்கிறார்.

## விவசாயிகள் ஈரத்தன்மை அதிகமுள்ள பகுதிகளில் விதைகளை சேமிக்க அட்வைஸ்

தூத்துக்குடி,: விதைகள் காற்றிலுள்ள ஈரப்பதத்தை கிரகிக்கும் தன்மையுடையவையாதலால், காற்றின் ஈரத்தன்மை அதிகமுள்ள கடலோரப் பகுதிகள் மற்றும் நதி கரைகளில் விதைகளை சேமித்திட ஈரக்காற்று புகாபைகளையே உபயோகிக்க வேண்டும்.இதுகுறித்து விதை ஆய்வு துணை இயக்குநர் நாராயண பிரசாத் கூறியதாவது, விதைகளை கிடங்குகளில் சேமித்து வைக்கும் போது சாக்குப் பைகளை ஒன்றின் மேல் ஒன்றாக வைக்கும்போது 6 அல்லது 7 வரிசைக்கு மேல் அடுக்க வேண்டாம். ஏனென்றால் மேலே உள்ள மூட்டைகளின் பாரம் அடியிலுள்ள மூட்டைகளைப் போட்டு அழுத்துவதால் அடி மூடையிலுள்ள விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்க வாய்ப்புள்ளது. விதை மூடைகளை வெறும் தரையின் மீது அடுக்கி வைப்பதைத் தவிர்க்க வேண்டும். அதே போல் சுவற்றின் மீது சாய்த்து அடுக்குதலையும் தவிர்க்க வேண்டும். இதனால் தரை மற்றும் சுவர்களில் உள்ள ஈரப்பதம் ஊடுருவி அவற்றைப் பாதிப்பதைத் தடுக்கலாம். எப்பொழுதும் விதை மூடைகளை மர அட்டகங்கள் அல்லது தார்ப்பாய் விரித்து அதன் மீது அடுக்கி வைக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தார்.

## கால்நடைக்கு கோமாரி நோய் தடுப்பு பணிகள்: தஞ்சை கலெக்டர் ஆய்வு

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில், கால்நடைத்துறை சார்பில் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு பணிகள் குறித்து, கலெக்டர் சுப்பையன் நேரில் ஆய்வு செய்தார்.

தஞ்சை உள்பட டெல்டா மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக கோமாரி நோய்களால் மாடுகள் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றன.

இதையடுத்து, தமிழக முதல்வர் ஜெ., உத்தரவின்பேரில், கால்நடைத்துறை தஞ்சை மண்டலம் சார்பில் கோமாரி நோய் கிருமிகள் பரவுவதை தடுக்க பல்வேறு பகுதிகளில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள்

உள்ளிட்ட பகுதிகளில் மேற்கண்ட பணிகளை தஞ்சை கலெக்டர் சுப்பையன் பார்வையிட்டார்.

கோமாரி நோய்கள் பாதித்த மாடுகளை நேரில் பார்வையிட்டு, சிகிச்சை முறை மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் குறித்து அதிகாரிகளிடம் கலெக்டர் கேட்டறிந்தார்.

மாடுகளின் உரிமையாளர்களிடம் போதிய விழிப்புணர்வையும், தடுப்பு முறை குறித்து விளக்கவும் அளிக்குமாறு, அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, கலெக்டர் சுப்பையன் கூறியதாவது:

தஞ்சை மாவட்டத்தில், மூன்று லட்சத்து, 34 ஆயிரத்து, 991 கால்நடைகள் உள்ளன.

இதில், மூன்று லட்சத்து, 33 ஆயிரத்து, 250 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

இந்நோய் தடுப்புக்கு தேவையான அனைத்து மருந்துகளும் போதிய அளவில் இருப்பில் உள்ளன.

இப்பகுதிகளில், 124 மருத்துவ குழுக்கள் அமைத்து, நான்கு கால்நடை அலுவலரும், ஒரு கால்நடை மருத்துவரும் இணைந்து, தீவிர சிகிச்சை பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்த வரும், 15ம்தேதி, சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தப்படும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

ஆய்வின்போது, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் செல்வநாயகம், உதவி இயக்குனர் டேவிட் மற்றும் அதிகாரிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

## விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஒத்திவைப்பு

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மொகரம் பண்டிகையை முன்னிட்டு மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நாளை(15ம் தேதி) நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. அன்றைய தினம் மொகரம் பண்டிகைக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதால்

கூட்டம் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

## எண்ணெய் பனை அபிவிருத்தி ஐந்து வட்டாரங்கள் தேர்வு

திண்டுக்கல் : எண்ணெய் பனை அபிவிருத்தி திட்டத்திற்காக திண்டுக்கல் மாவட்டத்தில் 5 வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகபட்சமாக 100 ஹெக்டேரில் எண்ணெய் பனை கன்றுகள் சாகுபடி திட்டத்தை துவக்க வேண்டுமென அரசு இலக்கு நிர்ண யித்துள்ளது.

பழநி, ஆத்தூரில் தலா 35 ஹெக்டேரிலும், வத்தலக்குண்டு, நிலக்கோட்டை, ரெட்டியார்சத்திரத்தில் தலா 10 ஹெக்டேரிலும் சாகுபடியை துவக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்டேருக்கு தலா 150 கன்றுகள் நடுவதற்கு ரூ. 10 ஆயிரம் மானியமாக வழங்கப்படும். இது தவிர சாகுபடியை துவக்கும் விவசாயிகளுக்கு உதவித்தொகை, சொட்டு நீர் பாசனம், பம்புசெட் அமைக்க நிதியுதவி, ஊடுபயிராக சிறுதானியங்களுக்கு மானியம், உரம் மற்றும் வேலி அமைப்பதற்கு மானியம் என, தாராளமாக நிதியுதவி செய்யப்பட உள்ளது.

முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும். எண்ணெய் பிழிதிறனை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக அரசு துவக்கியுள்ள இந்த சிறப்பு திட்டத்தில் சேரும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும், வேளாண் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

## நெற்பயிரில் பூச்சி தாக்குதல் கூடுதல் செலவால் கலக்கம்

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் சமீபத்தில் பெய்த மழையால் நெல் சாகுபடி தீவிரமடைந்துள்ளது. வயல்களில் களைக்கொல்லி மருந்து அடிக்கப்பட்டு வரும் நிலையில், நெற் பயிரில் படைப்புழு, வெட்டுப்புழு, இலைச் சுருட்டுப்புழு தாக்கி வருகிறது.

ஏ.ஆர்.மங்கலம்

விவசாயி ஜெயசீலன்

கூறியதாவது:

களைகொல்லி மருந்து மற்றும் மருந்துஅடி கூலிக்கு, ஒரு ஏக்கருக்கு, 1500 ரூபாய் செலவாகியது. பூச்சிகளை கட்டுப்படுத்த மேலும் 1500 ரூபாய் செலவழிக்கிறோம், என்றார்.

ஆர்.எஸ்.மங்கலம் வேளாண் உதவி இயக்குனர் கமாலுதீன் கூறியதாவது:

"புரோபெனோபாஸ்' 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுறது, என்றார்.

## ஒரு கிலோ கோழிக்கறி ரூ.100 'தடாலடி' விலை குறைப்பு

ஊத்துக்கோட்டை:ஒரு கிலோ கோழிக்கறி விலை, 100 ரூபாய் என, வியாபாரிகள் தடாலடியாக விலை குறைப்பு செய்துள்ளனர்.

அய்யப்ப சுவாமிக்கு விரதமிருந்து, அதிகஅளவில் மாலை போட்டு வரும் நிலையில், ஊத்துக் கோட்டையில், கோழிக்கறியின் விலை, குறைந்து வருகிறது.

ஊத்துக்கோட்டையில், கடந்த மாதம், கோழிக்கறியின் விலை கிலோ ஒன்றுக்கு, 180 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கடந்த, திங்கட்கிழமை முதல், கிலோ 120 ரூபாய்க்கு குறைந்தது.

இந்நிலையில், நேற்று, கோழிக்கறியின் விலை, கிலோ ஒன்றுக்கு, 100 ரூபாய் என, குறைத்து, விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து, வியாபாரி கவுஸ்பாஷா கூறியதாவது: நாமக்கல், பல்லடம், ஆந்திர மாநிலம் சித்துார் ஆகிய பகுதிகளில் இருந்து கோழி ஊத்துக்கோட்டை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சப்ளை செய்யப்படுகிறது.

கார்த்திகை மாதம் பிறக்க உள்ள நிலையில், அய்யப்ப பக்தர்கள், அதிகளவில், 'மாலை' போட்டு வருவதால், விற்பனை குறைகிறது. மேலும், கோழி உற்பத்தி அதிகரித்து வருவதால், அதை விற்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டன. அதனால் விலை குறைத்து, விற்பனை செய்கிறோம். அதிகமாக கோழிக்கறி வாங்குபவர்களுக்கு, மேலும் குறைத்து விற்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

### கால்நடைகளுக்கு நோய் தடுப்பு காட்டுப்பாக்கத்தில் மூலிகை வைத்தியம்

செங்கல்பட்டு:"கோமாரி நோய் வராமல் தடுப்பதற்கான மூலிகை மருத்துவ முகாம், விவசாயிகளிடம் வரவேற்பை பெற்றுள்ளது," என, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனர் சந்திரகாசன் தெரிவித்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தில், கால்நடைகளின் நோய்களை தடுக்க, மூலிகை சிகிச்சை மருத்துவ முகாம், காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தில் நேற்று, நடந்தது. கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனர் சந்திரகாசன் முகாமை துவக்கிவைத்து பேசியதாவது: பிற மாவட்டங்களில் கோமாரி நோயால், கால்நடைகள் பாதிப்புக்குள்ளாகி உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரவாமல் தடுப்பதற்காக, தடுப்புமுறை, சிகிச்சை முறை, செயல் விளக்கத்துடன் பயிற்சியாக அளிக்கப்படுகிறது, இதனை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி, கால்நடைகளை பராமரிக்க வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார். இருளர் பழங்குடி பெண்கள் நல அமைப்பு இயக்குனர் ராஜேந்திரன், தஞ்சாவூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆசிரியர் மைய தலைவர் புண்ணியமூர்த்தி ஆகியோர் பயிற்சி அளித்தனர்.
காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் குமரவேல் வரவேற்றார்.

### உளுந்து செடிகளில் களை எடுக்கும் பணி

ரிஷிவந்தியம் : ரிஷிவந்தியம் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள மானாவரி உளுந்து பயிர் செழித்து வளர்ந்துள்ளதால் களை எடுக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ரிஷிவந்தியம், தியாகதுருகம் பகுதியில் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி உளுந்து சாகுபடி செய்யப் பட்டுள்ளது. கனமழை, வறட்சியை தாக்கு பிடித்து வளர்ந்து பலன் தரும் பயிராக உள்ளது. இவ்வாண்டு பருவ மழை போதிய அளவு இல்லாமல் விதைப்பு தாமதமானது. உளுந்து செடிகள் செழித்து வளரும் நிலையில், களைகளை அகற்றும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
வேலையாட்கள் பற்றாக்குறை உள்ளதால் கூடுதல் கூலியை கொடுத்து பணிகளை செய்ய வேண்டிய நிலை உள்ளது. காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை களை

எடுக்க 70 ரூபாய் முதல் 90 ரூபாய் வரை கூலி தரவேண்டியுள்ளது. சில இடங்களில் செடிகளில் பூச்சு தாக்குதல் இருப்பதால் மருந்து தெளித்து பராமரித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு உளுந்து செடிகள், காய் முற்றும் நேரத்தில் போதிய மழையின்றி கருகியதால் மகசூல் பாதித்து நஷ்டம் ஏற்பட்டது. இவ்வாண்டு போதிய மழை பெய்து உளுந்து பயிரில் லாபம் ஈட்ட முடி யும் என்று விவசாயிகள் நம்பிக் கையுடன் உள்ளனர்.

## நபார்டு உழவர் மன்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

சங்கராபுரம் : எஸ்.எம்.டி., தொண்டு நிறுவனத் தின் சார்பில் தேசிய வேளாண்மை மற்றும் கிராம வளர்ச்சி வங்கி (நபார்டு) உழவர் மன்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டம் சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடந்தது.

எஸ்.எம்.டி., தொண்டு நிறுவன தலைவர் கிருஷ்ணன் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் கற்பகம் வரவேற்றார். வரகூர் முன்னாள் ஊராட்சித் தலைவர் அறிவுடைநம்பி முன்னிலை வகித்தார்.

தொண்டு நிறுவன பொதுச் செயலாளர் கற்பகம் பேசுகையில், விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைத்து நீரை சிக்கனமாக செலவு செய்தும், பண்ணை குட்டைகளை அமைத்து மழை காலங்களில் மழை நீரை சேமித்து நிலத்தடி நீர் குறையாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

தொண்டு நிறுவன தன்னார்வலர் தனவேல் பேசுகையில், விவசாய பொருட்களை மதிப்பு கூட்டப் பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என்றார்.

நபார்டு வங்கி உதவி பொது மேலா ளர் விக்ரமன் பேசுகையில், உழவர் மன்றங்களின் செயல்பாடுகள், நோக் கம் பற்றியும், கிராமங்களில் உழவர் மன்ற கூட்டமைப்பு ஏற்படுத்தி இயற்கை விவசாயம் செய்து உணவு பொருட்களை விளைவிக்க வேண் டும் என்றும், உழவர் மன்றத்தினர் வங்கி கடன் பெறுவது பற்றியும் எடுத்து கூறினார்.

## மழையின்றி சின்னசேலம் விவசாயிகள் கலக்கம் : வேளாண் துறை ஆலோசனை வேண்டும்

சின்னசேலம் : சின்னசேலம் பகுதி விவசாயிகள் மழை பெய்யாததால் நடவு செய்த நெல்பயிர்கள் காய்ந்து போகும் என கலக்கத்தில் உள்ளனர்.

சின்னசேலம் தாலுகாவில் கூகையூர், அம்மகளத்தூர், மேல்நாரியப்பனூர், பரிகள், கடத்தூர், தொட்டியம் உள்ளிட்ட 85 கிராமங்கள் உள்ளது. 2000க்கும் மேற்பட்ட ஏக்கரில் குறுவை மற்றும் நெல் பயிரிட்டுள்ளனர்.

மானாவாரி பயிர் கடந்த ஆண்டு பருவ மழை ஏமாற்றியதால் வழக்கமாக ஜூலை மாதம் நெல் பயிரிடும் பகுதி பாதியாக குறைந்தது. தொடர்ந்து மழை இல்லாததால் விவசாயிகள் நீர் இறைப்பு பயிரை தவிர்த்து மானாவாரி பயிர் செய்தனர். கடந்த 20 நாட்களாக பெய்த லேசான மழையை பயன்படுத்தி விவசாயிகள் நெல் நடவு செய்தனர். கன மழை பெய்யாததால் ஏரி, குளம் போன்ற நீர் நிலைகள் வறண்டன. நிலத்தடி நீரும் இல்லாததால் கிணற்று பாசனமும் குறைய தொடங்கியது.

துவக்கத்திலேயே  தண்ணீர் பற்றாக்குறை

இருந்ததால் அறுவடை செய்யும் போது தண்ணீர் இல்லாமல் பயிர்கள் அனைத்தும் காய்ந்து போகும்.  மாலை மற்றும் காலை நேரங்களில் பனி பொழிவதால் இதற்கு மேல் மழை வராது என விவசாயிகள் கூறி வருகின்றனர். நெல் பயிர் விற்பனை கடந்த மாதம் பெய்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் நெல் பயிரிடுவதற்கு நாற்று விட்டனர். மழையும் பெய்யவில்லை. கிணற்றிலும் தண்ணீர் இல்லாததால் நாற்றை மற்ற விவசாயகளிடம் விற்று விட்டனர். அதிக நாட்களான நாற்றுகளில் விவசாயிகள் கால்நடைகளை கட்டி வருகின்

றனர். பல விவசாயிகள் கடந்த ஆண்டு பயிர்செய்வதற்காக வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாத நிலையில் உள்ளனர். இந்த ஆண்டும் பயிர் செய்ய நகைகளை அடகு வைத்தும், தனி நபர்களிடம் கடன் வாங்கியுள்

ளனர். விவசாயத்தில் வேலை இல்லாததால் கடனை திருப்பி செலுத்த கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு கூலி வேலைக்குச் செல்கின்றனர். தங்களது கடனை செலுத்த கால்நடைகளை விற்கும் நிலையும் உள்ளது. இதனால் குடும்ப செலவுகளுக்கு கூட பணமின்றி மக்கள் சிரமப்படுகின்றனர். புயல் உருவாகி மழை பெய்தால் மட்டுமே பயிரை காப்பாற்ற முடியும்.இல்லையெனில் நெற்பயிர்கள் காய்ந்து போகும் என சின்னசேலம் பகுதி விவசாயிகள் கலக்கத்தில்

உள்ளனர்.
ஆலோசனை தேவை வேளாண் அதிகாரிகள் கிராமங்களுக்கு சென்று விவசாயிகளை நேரில் சந்தித்து எந்த பயிர் செய்துள்ளனர்.
கிணற்று நீர் எவ்வளவு உள்ளது என பார்த்து ஆலோசனை வழங்க வேண்டும். பருவ மழை ஏமாற்றினாலும் பயிர்களை காப்பாற்ற மாற்றுவழி குறித்து எடுத்துரைக்க வேண்டும். பயிர் காப்பீட்டு திட்டம் மற்றும் அரசு மூலம் கிடைக்கு நிதி உதவிகள் குறித்து கூற வேண்டும். கிணற்றை ஆழப்படுத்த வங்கி மூலம் கடனுதவி பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்

## விவசாயிகளுக்கு கடன் வழங்கும் விழா

கண்டமங்கலம் : கண்டமங்கலம் ஒன்றியம் வாதானூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கயின் சார்பில் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் விழா பி.எஸ்.பாளையத்தில் நடந்தது.
ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் ராமதாஸ் தலைமை தாங்கினார். வங்கி தலைவர் துளசிராமன், ஒன்றிய கவுன்சிலர் தேவி துளசிராமன், வங்கியின் துணை தலைவர் ராணி முன்னிலை வகித்தனர். வங்கியின் செயலர் செல்வராசு வரவேற்றார்.
தமிழக அரசு வேளாண்மை துறையின் மூலம் குமளம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி மனோகரனுக்கு 3.20 லட்சம் மதிப்பில், 1.25 லட்சம் ரூபாய் அரசு மானிய விலையில் மினி டிராக்டருக்கான சாவியை ஒன்றிய சேர்மன் சர்மிளாதேவிநெடுஞ்செழியன் வழங்கினார்.
வங்கியின் மூலம் ஏழை விவசாயிகளுக்கு குறுகிய கால பயிர் கடனாக 4 பேருக்கு தலா 16 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 64 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் ராமதாஸ் வழங்கினார். சிறுவங்தாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் நெடுஞ்செழியன், வங்கி இயக்குனர்கள் செல்வம், ராமமூர்த்தி, ராமானுஜம், மூர்த்தி, சுப்ரமணியன், தண்டபாணி, ராஜிவி, கவுரி, மங்கலட்சுமி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் ஒத்திவைப்பு

விழுப்புரம் : விழுப்புரத்தில் நாளை நடக்க இருந்த விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் ஒத்தி வைக்கபட்டுள்ளது.

இந்த மாதத்தின் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் நாளை (15ம் தேதி) கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. இன்று (14ம் தேதி) கொண்டாடப்பட இருந்த மொகரம் பண்டிகை நாளை கொண்டாடுவதால் அரசு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.
இதை யொட்டி அன்று நடக்க இருந்த விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் வரும் 29ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், சங்க பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று தங்களின் கோரிக்கைகளை அளித்து பயனடைய வேண்டும்.

## வெங்காயம் போல் முட்டை விலை உயர்வு: ஹோட்டலில் ஆம்லெட் "ரேட்' அதிகரிப்பு

நாமக்கல்: வெங்காயம் விலை உயர்வுக்கிடையே, முட்டையின் விலையும் கடுமையாக உயர்ந்து வருவதால், ஹோட்டல்களில் ஆம்லெட், ஆப்பாயில் விலை அதிகரித்துள்ளது. தேசிய அளவில், மஹாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில், வெங்காய சாகுபடி அதிகமாக இருந்தாலும், கடந்தாண்டு, பருவ மழை பொய்த்ததால், கடந்த, அக்டோபர் கடைசி வாரத்தில், ஒரு கிலோ, வெங்காயத்தின் விலை, 100 ரூபாயாக உயர்ந்தது. அதனால், சமையலுக்கு வெங்காய பயன்பாடு வெகுவாக குறைந்தது. தற்போது, வெங்காயத்தின் விலை படிப்படியாக குறைந்து, 50 முதல், 70 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஆம்லெட் போடுவதற்கு பயன்படும், வெங்காயத்தின் அளவு குறைக்கப்படுகிறது. சில ஹோட்டல்களில், ஆம்லெட் விலை அதிகரிக்கப்பட்டது. வெங்காயத்தின் விலை நிலையாக இல்லாததால், ஆம்லெட் விஷயத்தில், ஹோட்டல் உரிமையாளர்கள் ஒவ்வொருவரும், ஒரு மாதிரியான முறையை பின்பற்றி வருகின்றனர்.
முட்டையின் விலை, கடந்த, சில வாரங்களாக கடுமையாக உயர்ந்து வருகிறது. அதனால், ஹோட்டல்களில் ஆம்லெட், ஆப்பாயில், பேக்கரிகளில், ஸ்வீட், பிஸ்கட், பிரட் உள்ளிட்டவையின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு

முன், சாதாரண ஹோட்டல்களில், 12 ரூபாய்க்கு போடப்பட்ட ஆம்லெட், தற்போது, 14 ரூபாயாகவும், ஆப்பாயில், பத்தில் இருந்து, 12 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டு முட்டை கரு உள்ள ஆம்லெட், 25ல் இருந்து, 27 ரூபாயாகவும், ஆப்பாயில், 20ல் இருந்து, 22 ரூபாயகவும் உயர்த்தப்பட்டுள்ளது. அதே போல், பேக்கரிகளில் விற்கப்படும் ஸ்வீட், பிரட், பிஸ்கட் உள்ளிட்டவையின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. ஏ.ஸி., வசதி, ரெஸ்டாரண்ட் உள்ளிட்ட ஹோட்டல்களில், ஒரு முட்டை கரு உடைய ஆம்லெட், 20ல் இருந்து, 25 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. ஹோட்டல் உரிமையாளர் தங்கவேல் கூறியதாவது:

வெங்காயத்தின் விலை உயர்வு ஏற்பட்ட போது, ஆம்லெட்டில் வெங்காயத்தின் அளவை குறைத்துக் கொண்டோம். ஆனால், வெங்காயத்தின் விலை சற்று குறைந்து வரும் நிலையில், முட்டையின் விலை அதிகரித்து வருவதால், ஆம்லெட் மற்றும் ஆப்பாயில் விலையை உயர்த்தும் கட்டாயத்தில் உள்ளோம். ஆம்லெட் தயாரிக்கும் போது, முட்டை, வெங்காயம், மிளகு பவுடர், எண்ணெய், எரிபொருள் ஆகிய செலவுகளை கணக்கிடும் போது இழப்பு தான் ஏற்படுகிறது. வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்காக, ஆம்லெட் போடப்படுகிறது. அதனால், பழைய விலையை விட, இரண்டு ரூபாய் விலை உயர்த்தி உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். விலையில்லா ஆடுகள்

வாங்க மறுத்த பயனாளி மேட்டூர்: சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், மல்லிகுந்தம் பஞ்., பயனாளிகளுக்கு ஒரு மாதத்துக்கு முன், விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டது. இதில், 161 பயனாளிகளுக்கு செம்மாறியாடு மட்டும் வழங்கப்பட்டது. வெள்ளாடு கேட்ட, 15 பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் ஆடு வழங்கப்பட்டது. இதில், 14 பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கிய நிலையில், மீதமுள்ள ஒரு பயனாளியான ஷோபா மட்டும், கூடுதல் பணம் கொடுக்க முடியாது என, கூறி ஆடுகளை வாங்க மறுத்து விட்டார்.

பஞ்., தலைவர் வெங்கடேஷன் கூறியதாவது:

ஒரு பயனாளிக்கு, மூன்று ஆடுகள் வாங்க அரசு, 10,000 ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதில், சிறிய குட்டிகளை மட்டுமே வாங்க முடியும். பயனாளிகள் விரும்பினால், 10,000 ரூபாய்க்கு மேல் கூடுதல் பணம் போட்டு, பெரிய ஆடு வாங்கி கொள்ளலாம். பயனாளி ஷோபா குடும்பத்தினர் கூடுதல் பணமும் தர முடியாது, ஆடுகளும் பெரியதாக இருக்க வேண்டும் என, கூறினர். இதனால், அவர்கள் எதிர்பார்த்த ஆடுகளை வழங்க முடியாது என்பதால், அவருக்கு ஆடு வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## பயறு உற்பத்தியை பெருக்க வயல் வரப்பில் உளுந்து சாகுபடி

நாமக்கல்: "பயறு உற்பத்தியை பெருக்க, நெல் வயல் வரப்புகளில், உளுந்து சாகுபடி செய்து, கூடுதல் வருவாய் பெறலாம்' என, வேளாண் இணை இயக்குனர் (பொ றுப்பு) முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

நாமக்கல் மாவட்டத்தில், சம்பா பட்டத்தில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. நெல் வயல் வரப்புகளில், பயறு வகை பயிர் விதைப்பு செய்து, விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறுவதோடு, பயறு விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. நெல் நடவு செய்யும் விவசாயிகள், அனைவரும் குறுகிய வயதுடைய பயறு வகைப்பயிர்களான உளுந்து, தட்டைப்பயறு விதைகளை, நெல் வயல் வரப்புகளில், ஒரு அடி இடைவெளியில் ஊன்ற வேண்டும்.

வயல் வரப்புகளில் நெல் நடவு முடிந்தவுடன், ஈரமிக்க வயல் வரப்புகளில் பக்கவாட்டில் உளுந்து விதைப்பு செய்யலாம். முளைப்புத் திறன்மிக்க ஒரு விதையை மட்டும் ஊன்றினால், போதுமானது. ஒரு ஏக்கரில் நெல் வயல் வரப்புகளில், ஊன்றுவதற்கு கால் கிலோ பயறுவகை போதுமானது. 65 நாட்களில், 20 கிலோ பயறு மகசூல் ஒரு ஏக்கரில் விவசாயிகளுக்கு கிடைக்கிறது. இது ஒரு கூடுதல் வருமானம. வயல் வரப்புகளில் பயறு விதைப்பு செய்வதற்கு கூடுதல் செலவு ஏதும் இல்லை. உளுந்து, தட்டைப்பயறு பயிர்களில் உருவாகும் பொறி

வண்டு, சிலந்தி போன்ற நன்மை செய்யும் பூச்சிகள், நெல் பயிரைத் தாக்கும் புகையான் போன்ற தீமை செய்யும் பூச்சிகளை அழிக்கும். அதனால், பயிர் பாதுகாப்பு செலவு விவசாயிகளுக்கு குறைகிறது. குறைந்த நாட்களில் பயறு மகசூலைப்பெற்றிடவும், நன்மை செய்யும் பூச்சிகளைப் பெருக்கி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பை மேற்கொள்ளவும், நெல் வயல் வரப்புகளில் ஏதும் விடுபடாமல் உளுந்து, தட்டைப்பயறு விதைப்பு செய்ய வேண்டியது அவசியம். அதன் மூலம், பயறு உற்பத்தி பெருக வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 5 ஆண்டில் வரலாறு காணாத விலை உயர்வு முட்டை விலை 425 காசை எட்டியது

நாமக்கல்: கடந்த, ஐந்து ஆண்டுகளில் முட்டை கொள்முதல் விலை நிர்ணய வரலாற்றில், நடப்பு ஆண்டு, கோல்கத்தா மண்டல, "நிக்', நேற்று, 425 காசை தொட்டது. அதனால், மற்ற முட்டை மண்டலங்களும், போட்டி போட்டுக் கொண்டு விலையை உயர்த்தி வருகின்றன.தேசிய முட்டை ஒருங்கிணைப்பு மண்டலங்கள் (நிக்) நிர்ணயிக்கும், முட்டை கொள்முதல் விலையை அடிப்படையாக கொண்டு, உற்பத்தி மற்றும் விற்பனை மைய மண்டலங்களில் இருந்து, முட்டை சப்ளை செய்யப்படுகிறது. முட்டையின் தினசரி நுகர்வு, ஏற்றுமதி, மூலப்பொருட்கள் விலை உயர்வு ஆகியவற்றை கணக்கில் கொண்டு, "நிக்' மூலமாக பண்ணை மற்றும் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

நடப்பு ஆண்டு வடகிழக்கு பருவமழை, குளிர்கால சீதோஷ்ண நிலை ஆகியவற்றால், மக்களிடையே நுகர்வு அதிகரித்துள்ளதால், முட்டை விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. ஐந்து ஆண்டுகளில் முட்டை கொள்முதல் வரலாற்றில், நடப்பு ஆண்டு, அதிகபட்ச விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. வடமாநிலங்களில், கோல்கத்தா முட்டை மண்டலத்தில், முட்டையின் விலை, எப்போதுமே அதிகமாகவே இருக்கும். ஆனால், கர்நாடகா மாநிலம், மைசூரு முட்டை மண்டலத்தில், முட்டை கொள்முதல் விலை குறைவாகவே நிர்ணயம் செய்யப்படுகிறது.நாமக்கல் முட்டை மண்டத்தில், 2009-10ம் ஆண்டில், ஏப்ரல்

மாதத்தில் இருந்து, மார்ச் மாதம் வரை, முட்டையின் சராசரி விலை, 259.54 காசு, 2010-11ம் ஆண்டு, 249.5 காசு, 2011-12ம் ஆண்டு, 259.54 காசு, 2012-13ம் ஆண்டு, 309.17 காசு, 2013-14ம் ஆண்டு, நவம்பர் மாதம், 13ம் தேதி வரை, 333.63 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த, ஐந்தாண்டுகளில், நடப்பு ஆண்டு அதிகபட்சமாக, நேற்று முன்தினம், 390 காசு நிர்ணயக்கப்பட்டுள்ளது.
கோல்கத்தா முட்டை மண்டலத்தில் கடந்த, 2009-10ம் ஆண்டில், ஏப்ரல் மாதத்தில் இருந்து, மார்ச் மாதம் வரை முட்டையின் சராசரி விலை, 327.13 காசு, 2010-11ம் ஆண்டு, 264.16 காசு, 2011-12ம் ஆண்டு, 278.42 காசு, 2012-13ம் ஆண்டு, 327.13 காசு, 2013-14ம் ஆண்டு, நவம்பர் மாதம், 13ம் தேதி வரை, 349.88 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த, ஐந்து ஆண்டுகளில் நேற்று, முட்டை விலை அதிகபட்சமாக, 425 காசுகளை, கோல்கத்தா, "நிக்' தொட்டது.
தொடர்ந்து, கோல்கத்தா, பாட்னா, கோராக்பூர் ஆகிய முட்டை மண்டலங்கள் விலையை கடுமையாக உயர்த்தி வருவதால், மற்ற முட்டை மண்டலங்களும் முட்டை விலையை போட்டி போட்டுக் கொண்டு உயர்த்தி வருகின்றன. முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது என, கூறப்பட்டாலும், சில பண்ணையாளர்கள் மூலப்பொருட்கள் விலை உயர்வு என, கூறிவருகின்றனர்.
தற்போது உள்ள சூழ்நிலையில் முட்டையின் விலை, சராசரி விலையை விட, 30 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

## உற்பத்தி பாதிப்பால் தேங்காய் விலை கிடுகிடு

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில், கடும் வறட்சியால் காய்ந்து கருகி வரும் தென்னை மரங்களை, விவசாயிகள் வெட்டி, செங்கல் சூளை விறகுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.இதனால், தேங்காய் உற்பத்திபெருமளவில் பாதிக்கப்பட்டு, அதன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.
**பரமாரிப்பு**சேலம் மாவட்டம், வாழப்பாடி பகுதியில் புழுதிக்குட்டை ஆணைமடுவு அணை உள்ளிட்டபகுதிகளில்,4,000 ஹெக்டேரில் நீண்டகாலபலன் தரும்

தென்னை மரங்களை விவசாயிகள் பராமரித்துவருகின்றனர்.வாழப்பாடியை சுற்றியுள்ள முத்தம்பட்டி, சேசன்சாவடி, கூட்டாத்துப்பட்டி, அனுப்பூர், நீர்முள்ளிக்குட்டை, கோலாத்துக்கோம்பை, சிங்கிபுரம், சோமம்பட்டி, பொன்னாரம்பட்டி, வேப்பிலைப்பட்டி உள்ளிட்ட, 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் கிணற்று மேடுகளிலும், வயல் வரப்பு ஓரங்களிலும் ஏறக்குறைய, 3,000 ஹெக்டேரில் தென்னை மரங்கள் உள்ளன.

இதனால்,தமிழகத்தில்இருந்து வடமாநிலங்களுக்கு தேங்காய்ஏற்றுமதி செய்வதில், மாநில அளவில் வாழப்பாடி முக்கிய பங்கு வகித்து வருகிறது. வாழப்பாடி பகுதியில் இருந்து ராஜஸ்தான், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், அரியானா, குஜராத், ஒடிசா உள்ளிட்ட வட மாநிலங்களுக்கு ஆண்டு முழுவதும் தேங்காய் ஏற்றுமதிஆகிறது.வாழப்பாடி பகுதியில் மட்டும் ஓராண்டுக்கு ஏறக்குறைய, 500 கோடி ரூபாய் அளவுக்கு தேங்காய் வர்த்தகம் நடந்து வருகிறது. வாழப்பாடி பகுதியில் மட்டும் தேங்காய் ஏற்றுமதி தொழிலால், மரமேறுவோர், தேங்காய் உரிப்போர், தரம் பிரித்து லாரிகளில் லோடு ஏற்றுவோர், கமிஷன் ஏஜன்டுகள் என, 50 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

**கடும் வறட்சி:**கடந்த இரு ஆண்டுகளாக வாழப்பாடி பகுதியில் பருவமழை பொய்த்து போனதால் கடும் வறட்சி நீடித்து வருகிறது.பாசனத்திற்கு வழியின்றி காய்ந்து கருகி வரும், தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தும் விவசாயிகள், செங்கல் சூளை விறகுக்கு, அவற்றை விற்பனை செய்து வருகின்றனர். தேங்காய் உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஓராண்டுக்கு முன் அதிகபட்சமாக, 6,000 ரூபாய்க்கு விலை போன, 1,000 தேங்காய்கள், தற்போது, 10 ஆயிரம் ரூபாய் வரை, விலை போகின்றன.இதனால் தேங்காய் ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டு, தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். சில்லரை விலையில் ஒரு தேங்காய், 15 ரூபாய் வரை, விற்கப்படுவதால், நுகர்வோரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 14.11.2013

### கோமாரி நோயை கட்டுப்படுத்த 10 குழுக்கள் அமைப்பு

கோபி,:கோபி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கோமாரி நோயை கட்டுப்படுத்துவதற்காக நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி பேராசிரியர்கள் நான்கு பேர் தலைமையில் பத்து குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மண்டல இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் கோபி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக கால்நடைகளிடம் கோமாரி நோய் தாக்குதல் உள்ளது. அதைத்தொடர்ந்து நேற்று கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் வணங்காமுடி மேற்பார்வையில் நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி பேராசிரியர்கள் பாரலசுப்பிரமணியம் (நுண்ணியியல் துறை), அருள்மொழி(நோய் குறியியல் துறை), சரவணன்( நோய் தடுப்பு மருந்தியியல் துறை), வெங்கடேஸ்குமார்( சிகிச்சை துறை) ஆகியோர் தலைமையில் பத்து குழுக்கள் அமைக்கப்பட்டது.

அந்த குழுவினர் கோபி அருகே உள்ள கலிங்கயம், வெள்ளாங்காட்டுப் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கோமாரி நோய் தாக்கியுள்ள கால்நடைகளை நேற்று ஆய்வு செய்தனர். மேலும் அந்த கால்நடைகளில் இருந்து ரத்த மாதிரிகள், அவற்றின் தசை பகுதி, நோய் தாக்கியுள்ள பகுதிகளை சேகரித்தனர். அவற்றை பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

### சாகுபடி பரப்பளவு குறைந்தது முட்டைகோஸ் விலை உயர்வு

சத்தியமங்கலம், : சத்தியமங்கலத்தை அடுத்துள்ள தாளவாடி மலைப்பகுதியில் முட்டைகோஸ் சாகுபடி பரப்பளவு குறைந்துவிட்டதால் கடந்த ஆண்டு கிலோ ரூ.2க்கு விற்கப்பட்ட முட்டைக்கோஸ் தற்போது ரூ.12 வரை விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு சத்தியமங்கலம் தாளவாடியை அடுத்துள்ள எரணஹள்ளி, திகினாரை, ஜீரஹள்ளி, கல்மண்டிபுரம், அருள்வாடி, கெட்டவாடி, தமிழ்புரம், நெய்தாளபுரம் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் நீலகிரி, சேன்டேஸ், கணேஸ், போன்ற பல்வேறு ரக முட்டைகோஸ் சாகுபடி செய்தனர்.

கோஸ் உற்பத்தி பன்மடங்காக அதிகரித்ததால் அதன் விலை கிலோ ரூ.2 ஆக சரிந்தது. இதனால் முட்டைக்கோஸ் வியாபாரிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்தனர். இதன் காரணமாக, இந்தாண்டு முட்டைக்கோஸ் சாகுபடி செய்ய விவசாயிகள் போதிய ஆர்வம் காட்டவில்லை.

மஞ்சள், மக்காச்சோளம், மரவள்ளிக்கிழங்கு போன்ற பயிர்களுக்கு மாறினர். கடந்த ஆண்டு சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பில் 20 சதவீதம் மட்டுமே அதாவது 500 ஏக்கரில் மட்டுமே நடப்பாண்டு முட்டைக்கோஸ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சூசைபுரம், திகினாரை, மல்லன்குழி ஆகிய பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் விலை கிடைக்கும் நம்பிக்கையுடன் முட்டைக்கோஸ் பயிரிட்டுள்ளனர்.

சொட்டுநீர்ப் பாசனம் மூலம் முட்டைக்கோஸ் உற்பத்தி செய்யப்படுவதால் குறைந்தளவு தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருகின்றனர். இதன் பருவகாலம் 80 முதல் 90 நாள்கள் ஆகும். ஏக்கர் ஒன்றுக்கு 20 டன் வரை மகசூல் கிடைப்பதால் இங்கு நீலகிரி ரக முட்டைக் கோஸுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர்.

கடந்த மாதம் கிலோ ரூ.5க்கு விற்கப்பட்ட கோஸ், தற்போது கிலோ ரூ.12 வரை விற்பனையாகிறது. ஈரோடு, மேட்டுப்பாளையம் கோஸ் மண்டி வியாபாரிகள் கிராமத்துக்கு வந்து நேரடி கொள்முதல் செய்கின்றனர்.

இது குறித்து முட்டைக் கோஸ் விவசாயி நெய்தாளபுரம் சென்னஞ்சப்பா கூறியது: நவம்பர் மாதத்தில் மழை பெய்வதால் அழுகிவிடும் என்பதாலும் கடந்த ஆண்டு

சரியான விலை கிடைக்காததாலும் இந்தாண்டு பெரும்பாலான விவசாயிகள் முட்டைக்கோஸ் பயிரிடவில்லை.

இதனால் தற்போது அதன் சாகுபடி பரப்பளவு குறைந்துவிட்டது. தற்போது, சில இடங்களில் கோஸ் அறுவடை செய்யும் தருணத்திலும் செப்டம்பர் மாதத்தில் பயிரிட்ட முட்டைக் கோஸ், தற்போது மொட்டு விடும் தருணத்தில் உள்ளது.

கோஸ் வரத்து குறைந்து விட்டதால் தற்போது கிலோ ரூ.12 வரை விற்பனையாகிறது. கோடை காலத்தில் அறுவடை செய்யும் பொருட்டு தாளவாடி விவசாயிகள் தர்பூசணி சாகுபடி செய்ய தயாராகி விட்டதாலும் கோஸ் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. கர்நாடக மாநிலம் ஹாசன் பகுதியில் கோஸ் உற்பத்தி குறைந்துள்ளதால் நடப்பாண்டு கோஸ் விவசாயிகளுக்கு நல்ல லாபத்தை ஈட்டித்தரும், என்றார்.

**கோமாரியால் இறந்த மாடுகளுக்கு நிவாரணம் கேட்டு திமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டம் எம்பி தலைமையில் மயிலாடுதுறையில் நடந்தது**

மயிலாடுதுறை,: நாகை மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கி மாடுகளுக்கு நிவாரணம் கேட்டு மயிலாடுதுறை சப்கலெக்டர் அலுவலகம் முன் திமுக சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

மாவட்ட செயலாளரும், எம்பியுமான ஏகேஎஸ் விஜயன் தலைமை வகித் தார். முன்னாள் எம்எல்ஏக் கள் பன்னீர்செல்வம், ஜெகவீரபாண்டியன், குத்தாலம் கல்யாணம், குத்தாலம் அன்பழகன், பன்னீர்செல் வம், ஒன்றிய  செயலாளர் கள் மூவலூர் மூர்த்தி, ஞானவேலன், மோகன அன்பழகன், செல்லசேது ரவிக்குமார் மற்றும் வழக்கறிஞர் சிவதாஸ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதில் ஏ.கே.எஸ்.விஜ யன் பேசுகையில், வரலாறு காணாத வகையில் நாகை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் மர்ம நோயால் இறந்து வரு கிறது.  விவசாய தொழிலு க்கு அடுத்தபடியாக கால்நடைகள் வளர்ப்பு அதிகமாக உள்ள நாகை மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு அதிமுக அரசு பதவியேற்றுக்கொண்டதிலிருந்து தடுப்பூசி போடு வதை நிறுத்திவிட்டது. அதற்குத் தேவையான மருந்துகள் மருத்துவமனையில் இருப்பு இல்லை.

ஆந்திராவிலிருந்து வாங்கி வந்த கால்நடைகளிலிருந்து இந்த மர்மநோய் இங்கே உள்ள மாடுகளுக்கம் தொற்றிக்கொண்டது. ஏற்கனவே தடுப்பூசிப்போடாமல் இருந்தநிலையில் இந்த நோய் தீவிரமாகப் பரவி வரலாறு காணாத அளவிற்கு கால்நடைகளை இறக்கச் செய்துள்ளது. கடந்த ஒரு மாதமாக நாகை மாவட்டக் கிராமங்கள் சோகமயமாகியுள்ளது. சம்மந்தப்பட்ட கால்நடைத் துறை அமைச்சர் இந்தபக்கம்எட்டிப்பார்க்கவில்லை. இந்த மாவட்டத் தை சேர்ந்த அமைச்சர்கூட வராதது கண்டிக்கத்தக்கது.

கால்நடைகளை தாக்கு வது எந்தவிதமான நோய் என்று உடனடியாக கண்டுபிடித்து அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண் டும். இறந்த மாடு ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம், 2 ஆடுகளுக்கு ரூ.10 ஆயிரம் நிவா ரணம் வழங்க வேண் டும். இவ்வளவு சோக நிகழ்ச்சி நடந்துள்ளது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியினர் போராடாதது வியப்பாக இருக்கிறது. தேமுதிக எம்எல்ஏ அருட்செல்வன் கூட போராட்டம் நடத்தி விட்டார்.

விவசாயிகள் என்றாலே கருணாநிதி தான் உதவு வார். கூட்டுறவு விவசாயக்கடன் ரூ.7000 கோடியை தள்ளுபடி செய்தவர். அன்றைக்கு விவசாயிகள் கூட்டுறவு கடனை வாங்கினார்கள். இன்றைக்கு கூட்டுறவு கடனை அதிமுகவினர் வாங்கி வருகின்றனர். மின்கட்டணம் உயர்வு, பஸ்கட்டணம் உயர்வு என்று விலைவாசி உயரக்காரணமான தமிழக அரசை அகற்ற வேண்டும் என்றார். நகர்மன்ற துணை தலைவர் குண்டாமணி செல்வராஜ் நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்டம் முடிந்தவுடன் மயிலாடுதுறை நகர செயலாளர் குண்டாமணி செல்வராஜ் தலைமையில் திமுகவினர் சப்கலெக்டர் அலுவலகத்திற்கு சென்று மனு அளித்தனர்.

## வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம்... சென்னை - நாகை இடையே புயல் சின்னம் நாளை கரையை கடக்கிறது...

சென்னை: சென்னை, நாகப்பட்டினம் இடையே புயல் சின்னம் நாளை இரவு கரையை கடப்பதால், வடதமிழகம் மற்றும் புதுச்சேரியில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அந்தமான் அருகே கடந்த 2 நாட்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவானது. அது

வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று காற்றழுத்த மண்டலமாக மாறியுள்ளது. இதன் காரணமாக தென் தமிழகத்தில் சில இடங்களில் கனமழை பெய்த நிலையில், காற்றழுத்த தாழ்வு மண்டலமானது தற்போது சென்னைக்கு கிழக்கே 650 கி.மீ தொலைவிலும், நாகப்பட்டினத்திற்கு வடகிழக்கே 680 கி.மீ தொலைவிலும் மையம் கொண்டுள்ளது. நாளை இரவு அல்லது நாளை மறுநாள் அதிகாலையில் சென்னைக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையே புயல் சின்னம் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் தெற்கு ஆந்திர, வட தமிழக கடலோர பகுதிகள் மற்றும் புதுச்சேரியில் பலத்த மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
கடல் சீற்றம் அதிகம் காணப்படுவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னை, புதுச்சேரி, நாகை துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் 73 சந்தை மூடல் கோமாரி நோய்க்கு 2000 மாடுகள் பலி

கோவை:தமிழகத்தில் கோமாரி நோய் வேகமாக பரவி வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் 26 மாடுகளும், திருப்பூர் மாவட்டத்தில் 14 மாடுகளும், நாமக்கல்லில் 17 மாடுகளும் இறந்துவிட்டன. நாகப்பட்டினத்தில் 1000க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்துவிட்டன. கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மாடுகளின் இறப்பு அதிகமாகி வருகிறது.மாநில அளவில் கடந்த ஒரு வாரத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளதாக தெரிகிறது. 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் நோய் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழகத்தில் 73 மாட்டு சந்தை மூடப்பட்டது. மறு உத்தரவு வரும் வரை மாட்டு சந்தைகளை திறக்க கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

### வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னை-நாகப்பட்டினம் இடையே நாளை கரையை கடக்கும்

சென்னை:வட கிழக்கு பருவமழை அக்டோபர் 20ம் தேதி தொடங்கியதில் இருந்து தமிழகத்தில் எதிர்பார்த்த அளவுக்கு மழை பெய்யவில்லை. இந்நிலையில் 2

நாளுக்கு முன்பு அந்தமான் அருகே ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. அது மெல்ல மெல்ல வட மேற்கு திசையில் நகர்ந்தது. நேற்று அந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியது. இதன் மூலம் வட கிழக்கு பருவமழை தமிழகத்தில் மீண்டும் பெய்யத் தொடங்கியுள்ளது. இதையடுத்து தென் தமிழகத்தில் சில இடங்களில் கன மழை பெய்தது. அதில் அதிகபட்சமாக கொளச்சலில் 100 மிமீ மழை பெய்துள்ளது.வங்கக் கடலில் வலுப்பெற்றுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது வடமேற்கு திசையில் நகர்ந்து சென்னைக்கு கிழக்கு மற்றும் தென்கிழக்கே 650 கிமீ தொலை விலும், நாகப்பட்டினத்துக்கு வட கிழக்கே 680 கிமீ தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

மேலும் 15ம் தேதி நள்ளிரவு அல்லது 16ம் தேதி அதிகாலை நாகப்பட்டினம்-சென்னை இடையே கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இதையடுத்து கடலில் மணிக்கு 65 கிமீ முதல் 75 கிமீ வேகத்தில் காற்றுவீசும். 15ம் தேதியன்று தெற்கு ஆந்திர கடலோரம், வட தமிழக கடலோரம், புதுச்சேரி கடலோரம் ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்யும். அதாவது, 250 மிமீ அளவு வரை மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடலும் கொந்தளிப்புடன் காட்சியளிக் கும். இதனால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். சென்னை, புதுச்சேரி, நாகபட்டினம் ஆகிய துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு எண் 1 மற்றும் 2 கொடிகள் ஏற்றப்பட்டுள்ளன.இது தவிர ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**14.11.2013**

**விவசாய பணிகளை அதிகாரி ஆய்வு**



கறம்பக்குடி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய பணிகளை வேளாண்மை இணை இயக்குனர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**விவசாய பணிகள் ஆய்வு**

புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜஹான் கறம்பக்குடி ஒன்றிய பகுதியில் சுற்றுப்பயணம் செய்து, விவசாய பணிகளை ஆய்வு செய்தார்.

அப்போது மாங்கோட்டை கிராமத்தில் ஏ.டி.டி.39 விதை பண்ணையை ஆய்வு செய்து ஆலோசனை வழங்கினார். பின்னர் எம்.தெற்கு தெரு கிராமத்தில் சில்பாலின் முறையில் மண்புழு உரம் தயாரித்தல், பண்ணைக்குட்டை மற்றும் திருந்திய நெல் சாகுபடியில் நடவு செய்ததை ஆய்வு செய்து, விவசாயிகளிடம் கலந்துரையாடி அறிவுரை வழங்கினார்.

**தண்ணீர் தொட்டி**

மேலும் கரு.கீழத்தெரு கிராமத்தில் சின்னச்சாமி என்பவர் தோட்டத்தில் கரும்பில் நிலையான நீடித்த சாகுபடி முறையில் சொட்டுநீர் பாசனம் அமைத்துள்ளதை பார்வையிட்டார். இதைத் தொடர்ந்து ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி திட்டத்தில் முக்கூட்டுப்பட்டி கிராமத்தில் தண்ணீர் தொட்டி அமைத்தது மற்றும் பட்டத்திக்காடு நீர்வடிப்பகுதியில் பண்ணைக் குட்டை, களம் அமைத்தது குறித்து ஆய்வு செய்தார்.

இதையடுத்து கறம்பக்குடி வேளாண்மை விரிவாக்க மையத்தில் வேளாண்மை அலுவலர், உதவி விதை அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் களிடம் திட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த அறிவுரை வழங்கினார். 2013-14-ல் தேர்வு செய்யப்பட்டுள்ள மாதிரி கிராமம் குறித்து பல்வேறு துறை அலுவலர்களிடம் விளக்கம் கேட்டார். இந்த ஆய்வின்போது கறம்பக்குடி வேளாண்மை உதவி இயக்குனர் மனோகரன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**உடுமலை பகுதிகளில் பருவமழை பொய்த்ததால் கருகிய தென்னை மரங்கள்**



குடிமங்கலம்,

உடுமலை பகுதிகளில் பருவமழை பொய்த்ததால் தென்னை மரங்கள் கருகி வருகின்றன. இதனால் தென்னையை சார்ந்த நார் உற்பத்தி தொழிற்சாலைகளும் முடங்கும் அபாய நிலை ஏற்பட்டு உள்ளது. தென்னை நார் உற்பத்தி தொழிலுக்கு 20 சதவீதம் ஊக்கத்தொகை வாங்க வேண்டும் என்று உற்பத்தியாளர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**<u>தென்னை விவசாயம் பாதிப்பு</u>**

தமிழகத்தில் சுமார் 3½ லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இதில் திருப்பூர், கோவை மாவட்டங்களில் மட்டும் சுமார் 1½ லட்சம் பரப்பளவில் தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது.

உடுமலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த காலங்களில் பி.ஏ.பி. மற்றும் கிணற்றுப்பாசனம் மூலம் அதிக அளவு தென்னை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டன. இதனால் தென்னையை சார்ந்த கொப்பரை தேங்காய் உற்பத்தி, தென்னை நார் உற்பத்தி தொழில் ஆகியவை நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் முதல் தென்மேற்கு பருவமழை பெய்ய தொடங்கும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதுடன் வடகிழக்கு பருவமழையும் விவசாயிகளுக்கு கை கொடுக்கவில்லை. இதனால் சுமார் 15 ஆண்டுகளாக வளர்ந்து நல்ல மகசூல் கொடுத்து வந்த தென்னை மரங்கள் பல இடங்களில் முற்றிலும் கருகின. தேங்காய் உற்பத்தியும் வெகுவாக குறைந்துவிட்டது.

**<u>தேங்காய் மட்டை தட்டுப்பாடு</u>**

உடுமலை மற்றும் அதன்சுற்று வட்டார பகுதிகளில் மட்டும் சுமார் 400 கொப்பரை தேங்காய் உற்பத்தி செய்யும் களங்களும், 200 தென்னை நார் தொழிற்சாலைகளும் உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் தென்னை நார் தமிழகம் மட்டுமின்றி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.இந்த தென்னை நார் தொழிற்சாலைகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டதால் உற்பத்தியாளர்கள் அதிக செலவில் நவீன எந்திரங்கள் மூலம் தென்னை நார் உற்பத்தி செய்து வருகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தென்னை நார் உற்பத்திக்கு தேவையான உரித்த தேங்காய் மட்டைகள் அதிக அளவு கிடைத்து வந்தன. கடந்த ஆண்டுகளில் 5 ஆயிரம் உரித்த தேங்காய் மட்டைகள் ரூ.2 ஆயிரமாக இருந்தது. தற்போது தென்னை விவசாயம் பாதிக்கப்பட்டு உரித்த தேங்காய் மட்டைகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதோடு உரித்த தேங்காய் மட்டைகள் 3 மடங்குக்கும் மேலாக விலை உயர்ந்து ரூ.7 ஆயிரமாக உள்ளது. இதனால் தென்னை நார் உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ளது.

இது குறித்து தென்னை நார் உற்பத்தியாளர் அர்ஜுனன் கூறியதாவது:–

<u>பெரும் நஷ்டம்</u>

தென்னை நார் உற்பத்தியை முற்றிலும் எந்திரமயமாக்க சுமார் ரூ.1½ கோடி வரை முதலீடு செய்ய வேண்டியுள்ளது. தேங்காய் மட்டைகள் எந்திரத்தின் மூலம் பிரித்தெடுக்கப்பட்டு முதல் மற்றும் இரண்டாம் தர மஞ்சுகள் தயாரிக்கப்படுகிறது. 40 ஆயிரம் மட்டைகளில் இருந்து 30 கிலோ எடை கொண்ட 100 பண்டல்கள் மஞ்சு தயாரிக்க முடியும். இது தவிர கால் மிதியடிகள், மண் அரிப்பை தடுக்கும் வகையில் கடற்கரை வலைகள், மெத்தைகள், கயிறு ஆகியவை தயாரிக்கப்படுகிறது.

தற்போது 30 கிலோ எடை கொண்ட முதல் தர மஞ்சு ரூ.600–க்கும், இரண்டாம் தர மஞ்சு ரூ.560க்கும் விற்பனை செய்யப்படுகிறது. 5 ஆயிரம் தேங்காய் மட்டைகளில் இருந்து 15 பண்டல் மஞ்சுகள் தயார் செய்யப்படுகிறது. மஞ்சு தயாரிப்பதற்கான மூல பொருட்கள், உற்பத்தி செலவு, கூலி, மின்சார செலவு இவற்றினை கணக்கிட்டால் தென்னை நார் உற்பத்தியாளர்களுக்கு உரிய வருமானம் இல்லாமல் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது.

<u>தொழில் முடங்கும் அபாயம்</u>

இதனால் வங்கிகள் மூலம் கடன் பெற்று தொழில் செய்யும் தென்னை நார் உற்பத்தியாளர்கள் கடனை திருப்பி செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஆண்டுக்கு தென்னை மற்றும் அதனை சார்ந்த உற்பத்தி பொருட்கள் சுமார் ரூ.8 ஆயிரம் கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தநிலையில் தற்போது தென்னை விவசாயம் பாதிப்பு காரணமாக உற்பத்தி குறைந்து ஏற்றுமதியும் குறைந்து உள்ளது.

இதே நிலை நீடித்தால் தென்னை நார் தொழிற்சாலைகள் முற்றிலும் முடங்கும் அபாயம் உள்ளது. வெளிநாடுகளில் தென்னை நார் உற்பத்திக்கு 20 சதவீதம் வரை ஊக்க தொகை வழங்கப்பட்டு வரு கிறது. இது போல் அரசு தென்னை நார் உற்பத்தியாளர்களுக்கு ஊக்க தொகை, மானியங்கள் வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.